மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

ர் 3 | 15 - 2 - 55 | இதழ் 20

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

நாடகத்தில் பாடபேதம்

"சந்திரமோகன்" நாடகத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் காகபட்டர் வேடந்தாங்கி, அப்பகுதியைச் சிறப்புற ஆக்கினர். காகபட்டருக்குப் பிரதம சீடனாக ரங்கு என்பவன் வருவான். அதில், திரௌபதியைப் பற்றிய உரையாடல் காகபட்டருக்கும் ரங்குவிற்கும் நடைபெறும். "திரௌபதிக்கு ஐந்து கணவன்மார்கள். ஒரே சமயத்தில் தருமர் சொக்கட்டான் ஆடவும், பீமன் சாப்பாடு போடவும், அருச்சுனன் உலாவப் போகவும், சகாதேவன் தருமநூல் படிக்கவும், நகுலன் குதிரை சவாரி செய்யவும் கூப்பிட்டால் அவள் என்ன செய்வாள்?" என்று காகபட்டர் ஒரு கேள்வி கேட்பார்.

"என்ன செய்யமுடியும்? ரொம்பச் சங்கடந்தான்!" என்பான் ரங்கு.

"நினைப்பதற்கே இவ்வளவு சங்கடம் என்கிருயே, இதைப்போல எவ்வளவு சங்கடங்களை அந்தப் பதிவிரதைத் தாங்கியிருப்பாள்!" என்பார் காகபட்டர்.

"என்ன செய்தாள், ஸ்வாமி?" என்று கேட்பான் ரங்கு.

"திரௌபதி உடனே கிருஷ்ணபரமாத்மாவை நினைத்துக்கொண்டாள். அப்பொழுது கிருஷ்ணபரமாத்மா ருக்மணியுடன் ஊஞ்சலில் உட்கார்ந்து சல்லாபித்துக்கொண்டிருந்தார். கிருஷ்ணபரமாத்மா யாருடன் இருந்தார்?" என்று சீடனைக் காகபட்டர் கேட்பார்.

"ருக்மணியுடன்!" என்று ரங்கு சொல்லவேண்டும்.

ஆனல் ஒருநாள் 'சந்திரமோகன்' நாடகத்தில் இந்தக் கட்டம் வந்தபொழுது, "கிருஷ்ணபரமாத்மா யாருடன் இருந்தார்?" என்று காகபட்டர் கேட்டபொழுது, "ருக்மணியுடன்!" என்று சொல்வதற்குப் பதில், ரங்கு வேடம் போட்டவர் "திரௌபதியுடன்!" என்று தவறிச் சொல்லிவிட்டார். மிகத் தவருன பதில்! நாடகமேடையில், பக்கத்தில் இருப்பவர்களுக்கு ரங்கு சொன்ன பதில் தவருனது, பாடத்தில் இல்லாதது என்று தெரியும்! காகபட்டர் வேடத்தில் வேறுயாரும் இருந்திருந்தால் திகைத்துப்போயிருப்பார்கள். ஆனல் அறிஞர் அண்ணு சமாளித்துக்கொண்டு "ஏண்டா, மண்டு! ராதா, ருக்மணி, சத்தியபாமா, ஆயிரம் கோபிகைகள் இவ்வளவுபேரும் இருப்பது கிருஷ்ணபரமாத்மாவுக்குப் போதாதென்று, திரௌபதியையும் அவருடன் அனுப்பிவைத்துவிட்டாயா?" என்று சொன்னர்.

கைதட்டலில் கொட்டகை அதிர்ந்தது. ரங்கு வேடத்தில் இருந்தவன் பெருமூச்சுவிட்டான். "தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன், நான் மண்டு, ஸ்வாமி!" என்று. நிலைமையைச் சமாளிப்பதற்காக அண்ணு அவர்கள் சேர்த்துக்கொண்ட இந்த பதில் பின்பு பாடமாகவே நாடகத்தில் சேர்ந்துவிட்டது.

நாடகத்தில் பலருக்குப் பாடங்கள் தவறிப்போய்விடுவதுண்டு. அண்ணு அவர்கள் அவற்றைத் தெரிந்து, ஏதாவது கேள்வி—பதில் தந்து சமாளித்துக்கொண்டுவிடுவது வழக்கம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15 - 2 - 55 செவ்வாய்க்கிழமை

'பட்டம்' கவிழ்ந்தது!

திருவாங்கூர் - கொச்சி அரசியல் வானில், ின் ஏறமுடியாத உயரத்திற்கு ஏறி, தலை றுக்கேறி, ஒரு நிலையில் நிற்காமல், ஆட்ட க ஆடி, கொள்கைக் குட்டிக்கரணம் பல போட்டுக் காண்பவர்களுக்கு அச்சத்தை ளைவித்துக்கொண்டிருந்த 'பட்டம்' இப் பொழுது தலைக்குப்புறக் கவிழ்ந்துவிட்டது! இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்!

"அல்லலுற்று ஆற்றாது அழுதகண்ணீரன்றே, செல் த்தைத் தேய்க்கும் படை" என்று வள்ளுவர் றிய வாக்கு, எவ்வளவு உண்மையைப புலப் படுத்தி நிற்கிறது என்பதைத், தோழர் பட்டம் தாணுப்பிள்ளையின் அமைச்சர்அவை கவிழ்ந் ததிலிருந்தே எளிதில் உணர்ந்துகொள்ள லாம்.

மக்களாட்சிப் பண்பிற்கு மதிப்புக்கொடுக்கா மல், தான்தோன்றித்தனமாகத் தலைவிரி கோலமாக வெறிபிடித்தாடிய பட்டம் அமைச் சர்அவை வீழ்ந்ததானது, தென் திருவாங் கூர்த் தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழர் களின் உள்ளத்தில் பால் வார்த்தது போன் றிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. வெறிபிடித்த அமைச்சர்அவை பற்றித், தமிழர்கள் உள்ளத்தில் குறிப்பாகவும், மக்க ளாட்சிப் பண்பினர் உள்ளத்தில் பொதுவாக வும் கப்பிக்கொண்டிருந்த துக்கம் இப்பொழுது மறைந்து, இனி நாட்டிற்கு நலன்பயக்கும் அமைச்சர்அவை ஏற்படவேண்டுமே என்ற க்கம் பிறந்திருக்கும் என்று கருதுகிறோம்.

கடுஞ்சொல்லும், அளவுக்கு மீறிய அடக்கு முறைகளும் ஒரு ஆட்சியை எவ்வளவு விரை வில் அமிழ்த்திவிடும் என்பதற்குத் திரு - கொச்சி அமைச்சர்அவை வீழ்ச்சியே சிறந்த வாரு எடுத்துக்காட்டாகும். மக்களாட்சிக் கருத்து நிலவும் இக்காலத்தில் மிகப் பெரும் பான்மையோரின் ஆதரவைக் கொண்டிருக் கும் அமைச்சர் குழுவே, மக்களாட்சிப் பண் பிற்குச் சிறிது மாறுபட நடக்க முயன்றாலும் அது ஆட்டங்கொடுக்கிற நிலைமைக்கு வந்து சேர்ந்துவிடுகின்றது என்றால், மக்களாட்சிப் பண்பிற்கு மாறுபட்ட பெரும் வெறிச் செயல் களில் ஈடுபடும் சிறுபான்மைக் கட்சியின் ஆதிக்கம் என்னபாடுதான் படாது?

நம்பிக்கையில்லாத் தீர்மான நிறைவேற்றத் தின் மூலமாகத், தோழர் பட்டம் தாணுப்பிள் ளையின் அமைச்சர்அவை தோற்கடிக்கப் பட்டுவிட்டது. தோழர் பட்டம் தாணுப் பிள்ளைக்கு ஆதரவாக 30 வாக்குகளும், எதி ராக 60 வாக்குகளும், விழுந்திருக்கின்றன; 27 பேர் நடுநிலைமையை மேற்கொண்டிருக்கின் றனர். தோழர் பட்டம் அவர்களின் அமைச் சர்அவை வீழவேண்டியதன் இன்றியமையா மையைக் குறித்து, நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை ஆதரித்துப் பேசியவர்கள் தெளிவு படச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். தோழர் பட்டம் தாணுப்பிள்ளை தேர்தலில் கொடுத்த வாக்குறுதி எதனையும் நிறைவேற்றவில்லை, தொழிலாளர்க்கு எந்த நன்மையும் செய்ய வில்லை, மாறாகத் தொழிலாளர்க்கு இன்னல் கள் பல இழைத்திருக்கிறார் என்று பிரசா- சோசியலிச்ட் கட்சியைச் சார்ந்தவராக இருந்த சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். தோழர் பட்டம் பதவியேற்றிருந்த பத்து திங்களுக்குள்ளாக, ஐந்து இடங்களில் துப் பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின் றன; பல இடங்களில் தடியடிப் பிரயோகங் கள் நடைபெற்றிருக்கின்றன; திரு-கொச்சி வரலாற்றில் எந்த ஆட்சியிலும் காணமுடியாத அளவு சாமீன் வழக்குகளைப் பட்டத்தின் ஆட்சியில்தான் காணமுடிந்தது. மலையாளி களின் பெரும்பான்மை ஆதிக்கத்தை அடிப் படையாகக்கொண்டு, சிறுபான்மைத் தமிழர் கள்மீது அவர் வீசிய அடக்குமுறைகள்— தமிழர்க்கு அவர் இழைத்த கொடுமைகள் கணக்கிலடங்கா. தமிழர் கிளர்ச்சியில் பங்கேற் றுப், பணிபுரிந்த, தலைவர்களிலிருந்து சாதார ணத் தொண்டர்கள் வரையில், பலரும், சிறைச் சாலைகளிலும், போலீசுப் பணிமனைகளிலும் கடுமையாகத் தாக்கப்பட்டு அணு அணுவா கச் சிதைக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழர்களில் ஆடவரும் பெண்டிரும், முதியோரும், இளைஞரும், சிறு வரும் சிறுமியரும் போலீசால் விரட்டி விரட்டி யடிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்ப் பெண்கள் அங்குமிங்குமாகக் கற்பழிக்கப்பட்டிருக்கின்ற னர். சிறைச்சாலையில் கிடந்தவர்களில் சிலரின்

மீசை மயிரை ஒவ்வொன்றாகப் பிடுங்கி, அவர்களைக் கொடுமைக்குள்ளாக்கியிருக்கின்றனர் மலையாளப் போலீசார். இத்தகைய கொடுமைகளை இழைப்பதன்மூலம் தமிழர்களின் உரிமை வேட்கையை அடியோடு அழித்துத், தமிழர்களை என்றென்றும் பெரும்பான்மை மலையாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் அடக்கிவைக்கலாம் என்றுதான் தோழர் பட்டம் வெறியாட்சி நடத்தி வந்தார். இவ்வளவு கொடுமைச் செயல்களைப் புரிந்த தோழர் பட்டம், தமது பதவி பறிபோகும் இறுதிக் கட்டத்தில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விவாதத்திற்கு விடையிறுக்கையில்,

“மக்களில் பல்வேறு பகுதியினரும் இந்த அரசின் கீழ் இருக்கும்வரை, அவர்கள் அமைதியாக வாழுமாறு பார்த்துக்கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும். இந்த அரசைச் சேர்ந்த தமிழர்களிடம் எனக்கு மாறுபாடோ அன்றி வெறுப்போ கிடையாது. தமிழர் கிளர்ச்சி சம்பந்தமாக நான் தவறான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று நான் இன்றும் நம்புகிறேன்” என்று தமக்குத் தாமே நீதிபதியாக இருந்து தீர்ப்புக் கூறிக்கொள்கிறார். தோழர் பட்டம் தாணுப் பிள்ளையின உள்ளத்திற்கும் அவரது உதட்டிற்கும் எவ்வளவு வேறுபாடு இருந்துவருகிறது என்பதை இந்தக்கூற்று நன்கு தெளிவுபடுத்துகிறது.

தோழர் பட்டம் அவர்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள சொல்லிலும், செயலிலும் பிறழ்கிறார் என்பது மட்டுமல்ல, கொள்கையிலும் பல குட்டிக்கரணங்கள் போட்டுத்தான் பார்த்தார்.

திரு - கொச்சி தேர்தல் நடைபெற்றபோது, கம்யூனிச்ட்டுக் கட்சியோடும், பிற இடதுசாரிக் கட்சியோடும் கூட்டு சேர்ந்த ஐக்கிய இடதுசாரி முன்னணியாக இருந்த பிரசா-சோசலிச்ட்டுக் கட்சி, பதவி கிடைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டபோது, ஐக்கிய இடதுசாரி முன்னணியிலிருந்து பிரிந்துபோய்க் காங்கிரசுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இப்பொழுது காங்கிரசு அதனைக் கைகழுவிவிட்டுவிட்டதால், பதவியை எப்படியேனும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில், இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவைப் பெற, சிலபல சலுகைகளை நீட்டி முயன்று பார்த்தது. பிரசா-சோசியலிச்ட்டு அமைச்சர்அவையை நிலைநிறுத்த, இடதுசாரிக் கட்சிகளும் தம்மால் முடிந்த அளவு முயன்று பார்த்தன. ஆனால் இறுதியில் தோழர் பட்டம் தாணுவின் பதவி ஆசை, சூது, சூழ்ச்சி, தந்திரம், கொள்கை விற்பனை, பச்சோந்தித்தனம் எல்லாம் தலைக்குப்புறக் கவிழ்ந்துவிட்டன.

இதற்கு முன்பு நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டத்தின்போது, புன்னபாரா, வயலார் கைதிகளைப் பற்றிக் கம்யூனிச்ட்டுக் கேட்ட கேள்வி ஒன்றிற்கு விடையிறுக்கும் முறையில் தோழர் பட்டம் பேசுகையில், கொலை கொள்ளை, கலவரம் போன்ற பெருங்குற்றங்கள் செய்ததற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டதாகவும், அவர்களை அரசியல் கைதிகளாகக் கருதி அவர்களுக்குச் சலுகைகளோ அல்லது விடுதலையோ வழங்குவதற்கில்லை என்றும் கூறினர். ஆனால் அதே தோழர் பட்டம் அவர்கள் கம்யூனிச்ட்டுகளின் ஆதரவைப் பெற, அதே புன்னபாரா, வயலார் கைதிகளை அரசியல் தொடர்பு கொண்ட குற்றங்களைச் செய்தவர்கள் என்று கூறி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்குச் சற்று முன்னால் விடுதலை செய்துள்ளார். எனவே எதைச் செய்தேனும், எந்தக் கொள்கையை எப்படி விற்றேனும் தமது வெறிபிடித்த ஆட்சியை எப்படியேனும் நடத்திக்கோண்டுபோக வேண்டும் என்பதுதான் தோழர் பட்டத்தின் நோக்கமாக இருந்துவந்திருக்கிறதே ஒழிய, பொதுமக்களைப்பற்றியோ, தொழிலாளர்களைப் பற்றியோ, மக்களாட்சிப் பண்பைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

இறுதியாகத் தோழர் பட்டம்தாணுவின் ஆட்சி கவிழ்ந்ததுபற்றி நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். மகிழ்ச்சி பெறும் அதே நேரத்தில், இனி அமையும் அமைச்சர்அவை தமிழரின் உரிமை வேட்கையை மதித்து, நீதியளித்து, நேர்மையோடு நடந்துகொள்ளுமா என்ற ஐயப்பாடு, ஏக்கவுணர்வைத் தரவே செய்கிறது. மலையாளிகள், என்ற பெரும்பான்மை ஆதிக்க உணர்வோடு அமையும் எந்த அமைச்சர்அவையும் தமிழர்க்கு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கும் சூழ்நிலை ஏற்படவில்லை. சர்கச்காரன் ஆட்டை நிறுத்தி அதற்கு முன்னால் சிங்கம், அதற்குப் பிறகு புலி, அதற்குப் பிறகு கரடி என்று மாற்றி மாற்றி நிறுத்துவதைப்போல, திரு-கொச்சித் தமிழர்க்கு முன்னால் சிங்கம்போன்ற அமைச்சர் அவை போய்ப் புலிபோன்ற அமைச்சர் அவை வருவதற்கான சூழ்நிலையே எதிர்பார்க்கப்படுகிறது. திரு-கொச்சித் தமிழர்கள் கொடுமையினின்றும் காப்பாற்றப்படவேண்டுமானால், திரு-கொச்சித் தமிழ்ப்பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும். இதனை உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசாங்கம்

கருத்துக் கதிர்

..னி நாடு தேவை

..ஏறத்தாழ ஒரேவித இனம்—மொழி—நாக
..கம்—பண்பாடு — கொள்கை — கோட்பாடு
..காண்ட மக்கள், போதுமான அளவு நிலப்
..ரப்பில், போதுமான அளவு எண்ணிக்கை
..டன் வாழ்வார்களேயானால், அவர்கள்
..ங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளவேண்
..ம் என்ற அவசியமும், தங்களுக்கு ஒரு தனி
..டுதேவை என்ற உரிமை வேட்கையும்
..காண்டு எழுவது இற்றைக்கால உலகிய
..ல் இயல்பாகும். இந்த அடிப்படையில்
..ன்றுதான், திராவிடர்களாகிய நாம், திரா
..டநாடு திராவிடர்க்காகவேண்டும் என்று
..ழக்கமிடுகிருேம். நம்மைப்போலவே நாகர்
..ள் இந்திய ஆட்சியினின்றும் விடுபட்டுத்
..ங்களுக்கெனத் தனி ஆட்சியை ஏற்படுத்திக்
..காள்ள விரும்புகின்றனர். அதுபோலவே
..க்த்தூனியர்கள், பார்க்கிச்தான் ஆட்சியி
..ன்றும் விடுபட்டுத் தங்களுக்கென ஒரு
..க்த்தூனிச்தானை அமைத்துக்கொள்ள
..ரும்பாடுபடுகின்றனர். இப்பொழுது சீக்கி
..ர்களும் தமக்கென ஒரு தனி நாடு தேவை
..ன்பதை வற்புறுத்தத் தொடங்கிவிட்டனர்.

"முழு சுதந்திரம் பெற்ற பஞ்சாப் நாடு எங்களுக்கு
..வண்டும்; மொழிவழியாகக் கிடைக்கக்கூடிய மாநிலம்
..டும் கொண்டு சீக்கியர்கள் திருப்தியடைந்துவிட
..ட்டார்கள்; இந்துக்களைப் போலவே சீக்கியர்களும்
..மான் உரிமைபெற்றவர்களாக இருக்கவேண்டும;
..ஞ்சாப் மொழி பேசுகிற சீக்கியநாடு அமைவதற்கு
..ந்திய அரசியலார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்—
..ந்துக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்—என்ருலும்,
..ங்கள் சீக்கியநாடு பெற்றே தீருவோம்; மாநில புன
..மைப்புக்குழுவின் அறிக்கை சீக்கியநாடு அமைக்கும்
..ரிக்கையை உள்ளடக்கியதாக இல்லாவிட்டால்,
அந்த அறிக்கையை நிராகரித்து சீக்கியநாடு காண
தீவிரமான இயக்கம் நடத்துவோம்,"

—என்று, பஞ்சாபிலுள்ள சீக்கியர் இயக்க
மான அகாலி தளத்தின் தலைவர் மாச்டர்
தாராசிங் குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினை முழக்கம் தேவையான இடம் எங்
கணும் ஒலிக்கத் துவங்கிவிட்டது; ஒலிக்கத்
தானே செய்யும்!

⁘ ⁘ ⁘

குழப்பக் கொள்கையர்

பைத்தியக்காரன், சாதாரணமாக, தன்
எதிரில் காண்பவர்களையெல்லாம் பார்த்து,
அவர்கள் எல்லோருந்தாம் பைத்தியக்காரர்
கள் என்பானும். இப்படிப்பட்ட தன்மை
கொண்டவர்கள் அரசியல் உலகிலும் இருக்
கவே செய்கிருர்கள்!

இந்தியக் கமயூனிச்ட்டுகளின் பேச்சையும்
எழுத்தையும் கூர்ந்து கவனிப்பவர்கள், அவர்
கள் ஓயாமல் ஒழியாமல் பிற கட்சிக்காரர்களை
யெல்லாம் கொள்கையற்றவர்கள் — கொள்
கைக் குழப்பமுடையவர்கள் — திட்டமற்றவர்
கள்—தத்துவமற்றவர்கள் என்று குறை
சொல்லிக்கொண்டே இருப்பதை நன்கு உணர
லாம். நடைமுறை அரசியல் உலகைக் கவனித்
தால் இந்தியக் கம்யூனிச்ட்டுக் கட்சியைவிட
கொள்கையில் குழப்பங்கொண்டதும், நாளுக்
கொரு திட்டமும் பொழுதுக்கொரு போக்கும்
கொண்டதும் ஆன வேறு எந்த அரசியல்
கட்சியையும் அவ்வளவாகக் காணமுடியாது.

திரு-கொச்சியில் உள்ள கம்யூனிச்ட்டுக்கட்சி
யின நடவடிக்கைகளே மேற்கண்ட கூற்றுக்
குப் போதுமான எடுத்துக்காட்டுகளாகும். பி.
சோ. கட்சி திரு-கொச்சிக் கம்யூனிச்ட்டுக் கட்சி
யோடு சேர்ந்து ஐக்கிய இடதுசாரி முன்னணி
யில் நின்று காங்கிரசை எதிர்த்தது. தேர்தலில்
வெற்றிபெற்ற பிறகு பிரசா-சோசியலிச்ட்டுக்
கட்சிக்கு நம்பிக்கைத்துரோகம் செய்துவிட்டுக்,
காங்கிரசோடு உடன்படிக்கை செய்துகொண்டு
திரு-கொச்சியில் அமைச்சரவையை அமைத்

..ன்வரவேண்டும்; அதனைச் சென்னை அர
..ங்கம் வற்புறுத்தவேண்டும். மத்திய அர
..ங்கத்தை இணங்கவைக்கும் திட்டத்தை
..றைவேற்ற, திரு-கொச்சித் தமிழ்ப்பகுதிகளி
..ள்ள அரசியல் கட்சிகளெல்லாம், கூடிக்
கலந்துசெய்யும் பொதுவான அடிப்படையில்
போராட முன்வருமாக! இல்லையானால் திரு-
கொச்சி ஆட்சிப்பீடத்தில் ஏறும் ஒவ்வொரு
முதன் மந்திரியும் நாளடைவில் ஒவ்வொரு
'பட்டமாக' மாறவே செய்வார்கள்!

தது. அப்பொழுது பிரசா-சோசியலிச்ட்டுக் கட்சியின் கொள்கை—திட்டம்—போக்கு ஆகியவற்றைக் கம்யூனிச்ட்டுக் கட்சி முழுமூச்சுடன் வெளியிலும், சட்டமன்றத்திலும் எதிர்த்தது.

திரு-கொச்சித் தமிழ்ப்பகுதியில் நடைபெற்ற தமிழர் அறப்போராட்டத்தில், கம்யூனிச்ட்டுக் கட்சியைச் சார்ந்தோரும் பங்குகொண்டனர். தோழர் ப, சீவானந்தம் அவர்கள்தான் நிபந்தனை ஏதும் இன்றி தி. த. நா. காங்கிரசு ஆரம்பித்த போராட்டத்தில் குதிப்பேன் என்று நாகர்கோயில் பொதுக்கூட்டத்தில் கூறிவிட்டு அறப்போராட்டத்தில் நேரடித்தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். 1954 ஆகச்ட்டுத் திங்கள் 11-ஆம் நாள் நடைபெற்ற 'விடுதலை நாள்' போராட்டத்தில் கம்யூனிச்ட்டுகள் முழுக்க முழுக்கக் கலந்துகொண்டனர். தோழர் பட்டம தாணுவின் அரசாங்கம் எடுத்த அடக்குமுறைகளையும், பிரயோகித்த துப்பாக்கிப்பிரயோகங்களையும் அவர்கள் வன்மையாகக்கண்டித்தனர். பிரசா—சோலியலிச்ட் அரசாங்கம் ஒரு பிற்போக்கு அரசாங்கம் என்பதைச் சுட்டிக்காட்ட அவர்கள் தவறியதேயில்லை; அந்த அரசாங்கம் ஒழியவேண்டும் என்பதிலே அக்கறைகாட்டிவந்தனர். பிரசா-சோசியலிச்ட்டுக் கட்சியினரும், கம்யூனிச்ட்டுக் கட்சியினரைத் தமது நேரிடை எதிரிகள் என்று கருதிதான் ஆட்சிசெலுத்திவந்தனர். அந்தக் காரணத்தால்தான், புன்னபாரா—வயலார் கைதிகள் கொலை—கொள்ளை — கலவரம்போன்ற பெருங் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டதால், அவர்களை அரசியல் கைதிகளாக எண்ணுவதற்கில்லை என்று தோழர் பட்டம் சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்.

பிரசா-சோலியலிச்ட்டு அமைச்சரவையைக் கம்யூனிச்ட்டுக் கட்சி எந்த எந்த காரணங்களுக்காக எதிர்த்ததோ, அந்தந்தக் காரணங்கள் இன்னமும் போக்கப்படாமல்—மாற்றப்படாமல் அப்படியேதான் இருக்கின்றன. காரணங்கள் அப்படியே இருந்தும், கம்யூனிச்ட்டுக் கட்சி, திரு-கொச்சி சட்டமன்றத்தில் பி. சோ. கட்சிக்கு ஆதரவுதரும் நடவடிக்கைகளில் அண்மையில் இறங்கியிருக்கிறது. ஏன் இந்தத் திடீர்க் கொள்கை மாற்றம்? பி. சோ. அமைச்சரவைக் கொள்கையைப், போக்கை மாற்றிக் கொண்டதா என்றால், இல்லை! கொள்கையில் மாறுதல் தெரிவிக்காத பி-சோ. கட்சிக்குக் கம்யூனிச்ட்டுக் கட்சி பின் ஏன் ஆதரவுதர முன்வந்தது? பி-சோ. கட்சி சலுகைகாட்டியது; கம்யூனிச்ட்டுக் கட்சி சலுகையை பெற்றுக்கொண்டது! அவ்வளவுதான்!

புன்னபாரா-வயலார் கைதிகளைப் பி-சோ. அரசாங்கம் விடுதலை செய்தது; உடனே கம்யூனிச்ட்டுக் கட்சி அந்த நன்றியை மறக்காமல், நிபந்தனையற்ற ஆதரவுதர முற்பட்டுவிட்டது! கொள்கையல்ல—சலுகைதான் முக்கியம் என்பதை இதன்மூலம் கம்யூனிச்ட்டுக் கட்சி நிலைநாட்டிவிட்டது!

கொள்கையிலே—போக்கிலே இவ்வளவு குழப்பம்! இந்தக் கம்யூனிச்ட்டுகள்தாம் பிறரைக் குழப்பக் கொள்கைக்காரர்கள் என்கின்றனர்! திரு-கொச்சி நிலையைக் கவனித்தால் புரியும் யார் **குழப்பக் கொள்கையர்** என்பது!

° ° °

எல்லாம் அங்கேதானாம்

ரஷ்யாவின் உதவியோடு இந்தியா ஏற்படுத்தும் பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலையைத், சேலத்தில் நிறுவவேண்டும் என்று தென்னாட்டுக்காரர்கள் எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும், அவ்வேண்டுகோளை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, அந்த உருக்குத் தொழிற்சாலையை மத்திய பிரதேசத்தில் நிறுவுவது என்று இந்திய அரசியலார் வழக்கம்போல் முடிவுசெய்துவிட்டனர். ரஷ்யா ரூ 44 கோடி மதிப்புள்ள பொறிகளைக் கடனாக வழங்குமாம்; இந்திய அரசாங்கம் ரூ 10 கோடி அளவுக்குச் செலவிடுமாம். இந்திய அரசியலாரையும் சரி, வெளிநாட்டிலிருந்து வரும் நிபுணர்களையும் சரி அவர்கள் எல்லோரையும் தம் விருப்பத்திற்கு இழுக்கும்படியான வல்லமையை வடநாட்டு வணிகக்கோமான்கள் பெற்றிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், அடுத்த ஆண்டு பிரிட்டனின் உதவியோடு இந்திய அரசியலார் வேறோர் பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலையைப் பீகாரிலாவது அல்லது மேற்கு வங்கத்திலாவது நிறுவ எண்ணியிருக்கிறார்களாம்.

எல்லாம் வடக்கேதானாம்; வடநாடு வளர்கிறது; தென்னாடு தேய்கிறது! தென்னாடு இதனை உணர்வது எந்நாளோ!



(16)

அம்பரிஷன் யாகத்தில் பசுவிற்குப் பதிலா கப் பலியிடப்படவிருந்த சிறுவன் 'மிருத்து யுஞ் ஜய' என்ற மந்திரத்தை உச்சரித்ததால் உயிர் தப்பினான். இந்தப் புராணக் கதையில், 'மிருத்துயுஞ் ஜய' மந்திரத்துக்குள்ள மகிமைக் கூறப்பட்டாலும், யாகப்பசுவை ஒளித்த இந்திரனின் திருட்டுத்தனமும், யாகப் பசுவிற் குப் பதிலாக ஒரு சிறுவனைக் கொன்று மாமி சத்துண்டுகளாக்கி, யாகத்தில் பங்குபோட்டுக் கொள்ளத் தயாரான புரோகிதர்களின் காட்டு மிராண்டித்தனமும் வெளிப்படுவதைப் புரா ணக்காரர் கவனித்ததாகத் தெரியவில்லை. மாட்டைக் கொன்று தின்பதுமட்டுமல்ல, கிடைத்தால் மற்றொரு மனிதனையும் கொன்று உண்ணும் வழக்கம் அந்தக்காலத்து ஆரியர் களிடை இருந்திருக்கலாம். இல்லாவிட்டால் பசுவிற்குப் பதிலாக ஒரு சிறுவனை ஏற்று யாகச் சடங்குகளை முடிக்க அம்பரிஷனின் யாகப் புரோகிதர்கள் முன்வந்திருக்கமாட்டார் கள். இந்த ஒரு கதையில் மட்டுமல்ல, மற்றும் பலவிடத்தில் மனிதனைப் பிடித்து யாகப்பசு வாகப் பாவித்துக் கொல்லப்படும் சம்பவங்கள் புராணத்தில் வருகின்றன. இந்திரனைப் பற்றிய மற்றொரு கதையில், நரப்பசுவை பலியிட்ட சம்பவம்—நரப்பசு என்றால் முன்பு குறிப்பிட்ட படி மனிதப் பசு என்று அர்த்தம். பசுவுக்குப் பதிலாக மனிதனைப் பலியிடல்—கூறப்படு கிறது.

வலாசுரன் என்பவன் மகா சிவபக்தனாம். அவன் சிவபக்தனாக இருந்தபோதிலும் அசுரர் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருந்ததாகப் புராணம் கூறுகிறது. அவன் சிவபெருமானை எண்ணிக் கடுந்தவம் செய்தான். தவத்தின் முடிவில், சிவபெருமான் உமையாள் பாகனாய், இடபவாகன ரூபனாய்த் தோன்றி "அப்பனே! உன் கடுந்தவத்தைக் கண்டு மெச்சினோம்! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டருள, வலாசுரன் "நெடுநாள் வாழ்வும், இறந்தபின் தேகம் நவரத்தினமாகவும் வேண் டும்!" என்று வரம் கேட்டானாம். அதை அருளி, சிவபெருமான் மறைந்துவிட்டார்.

வரம் பெற்றுத் திரும்பிய வலாசுரன் பலம் பெற்று விளங்கியதுடன், எவராலும் வெல்ல முடியாத அரசை அமைத்துக்கொண்டான். வலாசுரனின் வலிமையால் அசுரர் கூட்டம் ஆதிக்கம் பெறவும், தேவர் கூட்டம் அடிமை வேலை செய்யவுமான காலம் பிறந்தது. வலா சுரனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறமுடி யும் என்ற நம்பிக்கை இந்திரனுக்குப் போய் விட்டது. ஆதலால் அவனை அழிப்பது எப்படி என்று சூழ்ச்சித்திட்டம் ஒன்றை அவன் தயாரித்தான்.

ஒரு நாள் திடீரென்று, இந்திரன் தன் பரி வாரம் சூழ வலாசுரனைச் சந்திக்கச் சென்றான். தன்னைத் தேடி இந்திரன் வந்திருப்பது கண்டு வலாசுரன் அவனை எதிர்கொண்டழைத்துத் தனது அரண்மனைக்குள் வரவேற்றான்.

"வலாசுரனே! நீ மிகவும் புகழ்வாய்ந்தவன்' வல்லவன்! உன் நட்பை நாடி நான் வந்திருக் கிறேன்!" என்று இந்திரன் சொன்னான்.

"வீண் சண்டையை நானும் விரும்பவில்லை! நட்புரிமையுடன் வாழ்வதை நானும் வரவேற் கிறேன்!" என்று வலாசுரன் மகிழ்வடைந் தான்.

"நண்பனே! உன்னை ஆதரிக்க நான் கட மைப்பட்டவன், நண்பனாக ஆகிவிட்ட கார ணத்தால்! உனக்கு என்ன வரம் வேண்டும்! கேள் நான் தருகிறேன்!" என்று இந்திரன் சொன்னான்.

வலாசுரன் இந்திரனைவிடப் பலவகையிலும் வலிமிக்கவன், உயர்ந்தவன். தன்னைவிட

வளத்திலும் வலிமையிலும் தாழ்ந்துள்ள இந்திரன் தனக்கு வரந்தருவதாக வாக்குத் தருவது, வலாசுரனை ஏளனம் செய்வதுபோ லிருந்தது. வலாசுரன் நகைத்துக்கொண்டு, "நீ எனக்கு ஒன்றும் வரம்தரவேண்டாம்! உனக்கு வேண்டுமானால் வரம் கேள், நான் அவற்றைத் தருகிறேன்!" என்று இறுமாப் புடன் பதிலளித்தான்.

இந்திரன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சமயம் வந்தது. "நான் நடத்தும் யாகத்திற்கு நீ யாகப்பசுவாக வரவேண்டும்!" என்று இந் திரன் கேட்டான்.

வலாசுரன் இந்திரனின் வஞ்சகத்தைக் கண்டு ஒருகணம் திகைத்துவிட்டான். ஆயி னும் தான் கொடுத்த வாக்கை மீற அவன் ஒருப்படவில்லை. தான் வரமளித்த வண்ணம் இந்திரன நடத்தும் யாகத்துக்குச் சென்றான். அங்கு, இந்திரனும், யாகம் நடத்தும் ரிஷி களும் வலாசுரனைப் பிடித்துக் கட்டி, மாட்டைக் கொல்வதுபோலக் கொன்று யாகம் நடத்தி விட்டனர்.

மேற்சொன்ன இரு கதைகளிலிருந்து, பசு விற்குப் பதிலாக மனிதர்களைக் கொன்று யாகம் நடத்தும் முறை புராணங்களில் கூறப் பட்டதுடன், ஆரியர்களிடை அந்தப் பழக்கம் இருந்தது என்றும் பெறப்படுகிறது. அது கூடாத செயல், வேத சாஸ்திரங்களுக்கு ஒவ் வாத ஒழுக்கம் என்றால், அவ்வாறு செய்ய முன்வந்த அம்பரிஷனுக்கும், செய்துவிட்ட இந்திரனுக்கும் கடும் நரகதண்டனைகளோ, கடவுள் சாபமோ கிடைத்திருக்கும். சாஸ்திர சம்பிரதாயங்கள் தெரிந்த யாகப் புரோகிதர் களே, நரப்பசுவை ஏற்று யாகங்கள் நடத்தி யிருக்கின்றனர். வேதகால ஆரியர் நடத்திய வேள்வி முறைகளில், பசுவிற்குப் பதில் மனித னைக் கொன்று யாகம் நடத்துதலும் ஒன்றாக இருந்திருக்கும்.

மற்றவர்கள் யாகம் நடத்தும்பொழுது, யாகத்திற்கு முக்கியமான பசுவையோ, குதி ரையையோத் திருடிவந்துவிடுவது இந்திர னின் கட்டுப்பாடான வேலைத்திட்டமாக இருந்திருக்கிறது.

சகரன் என்ற அரசன் இருந்தானாம். அவ னுக்கு இரண்டு மனைவிகள், கேசினி, சுமதி யென்று. இரண்டு மனைவிகளிடமும் அரசனுக் குப் புத்திரர்கள் பிறக்கவில்லை. தனக்குப் பின் அரசை ஆள பிள்ளையில்லையே யென்ற கவலை யுடன் அரசன் காட்டிற்குப்போய் சிவபெரு மானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான், தனது மனைவிகள் கர்ப்பந்தரிக்க வேண்டுமென்று தவத்தின் முடிவில் சிவபெருமான் அவன் முன் தோன்றி, அவன் கேட்ட வரங்களை கொடுத்துச் சென்றார்.

வரத்தைப் பெற்று சகரன் நாடு திரும்பி னான். அவனுடைய மனைவியரும் கர்ப்பவதி களாயினர். குழந்தைகள் பிறந்தன. முதலில் சகரன் ஒரு பிள்ளையிருந்தால் போதும் என்று கவலைப்பட்டான். சிவபெருமானிடம் வரம் பெற்றுவந்ததும், பிள்ளைகள் கணக்கின்றி பிறந்துகொண்டேயிருந்தன. இரண்டாவது மனைவியான சுமதியிடம் 60,000 பிள்ளைகள் பிறந்தனவாம். முதல் மனைவி கேசினியிடம் ஒரு பிள்ளை மட்டுமே பிறந்தது, இந்த அறு பதினாயிரத்தோரு பிள்ளைகளும் அரண்மனை யில் இருந்தனர்.

இவ்வளவு புத்திரர்கள் தனக்குப் பிறந்துள் ளார்களே யென்று சகரன் கவலையுற்றதாக தெரியவில்லை. மாறாகக் களிப்படைந்தாக என்று புராணம் கூறுகிறது. புத்திரர்களை அடைந்த களிப்பால், அவன் ஒரு அசுவமேத யாகம் செய்ய முயன்றான். அதற்காக ஒரு குதிரையைப்பிடித்து நாடெங்கும் சுற்றிவர செய்தான்.

ஆயிரம் அசுவமேத யாகங்களை ஒருவன் செய்தால், அவனுக்கு இந்திரபதவி கிடைக் கும் என்ற விதியொன்றிருந்தது. ஆகவே யார் அசுவமேத யாகத்தைச் செய்தாலும் இந்திரனுக்கு உடனே கிலி உண்டாகிவிடும். ஆயிரம் யாகங்கள் முடித்தால்தான் இந்திர பதவிக்கு ஆபத்து என்றாலும், அவர்கள் செய்யும் முதல் அசுவமேத யாகத்தைத் தடுப் பதற்காக இந்திரன் வந்துவிடுவான், முன் னெச்சரிக்கையாக. அதுபோலச் சகரன் செய்யவிருந்த அசுவமேத யாகத்தின்மீது இந்திரனுக்குப் பகைமை உண்டாயிற்று. உடனே அந்த யாகத்திற்காகப் பொறுக்கி யெடுக்கப்பட்ட யாகக் குதிரையை இந்திரன் திருடிப்போய், பாதாளத்தில் ஒரு காட்டில் தவம்செய்துகொண்டிருந்த முனிவரொரு ரின் பக்கத்தில் கட்டிவிட்டான்.

அசுவமேத யாகத்திற்குத் தயார்செய்து கொண்டிருந்த சகரன் யாகக்குதிரைக் காண மற்போனதும், தனது குமாரர்களை அனுப்பி தேடச்சொன்னான். அரசகுமாரர்களென்றால் ஒருவர் இருவரா, 60,000 பேர்களல்லவா! ஒரு பெரிய பட்டாளம் கிளம்பிப்போவதுபோல சென்றார்கள். பூமிமேல் எங்குதேடியும் அந்த குதிரையை அவர்களால் கண்டுபிடிக்கமுடி வில்லை.

பூமியில் குதிரை இல்லை என்றதும், அது பாதாளத்திற்குப் போயிருக்கும் என்று அவர்களில் ஒருவனுக்குத் தோன்றியது. பாதாள லோகம் என்றால், பூலோகத்திற்குக் கீழே இருப்பது என்று மட்டும் அவர்களுக்குத் தெரியுமேயன்றி, பூலோகத்திலிருந்து பாதாள உலகத்திற்குச் செல்லும் வழி அவர்களுக்குத் தெரியாது. கடைசியாக அவர்களில் ஒருவன் —அந்தப்புத்திசாலியின் பெயர் புராணத்தில் தரப்படவில்லை—“பாதாளத்திற்குப் போக பூலோகத்தின் மண்ணைக் குடைந்து வழி யமைத்துவிடலாம்” என்று யோசனை சொன்னான்.

அரசகுமாரர்கள் அறுபதினாயிரம் பேர்களும் பூமியைத் தோண்ட ஆரம்பித்தார்கள். முதலில் கிணறுபோலக் காணப்பட்டது, குளமாகி, ஏரியாகி, அவர்கள் தோண்டத் தோண்டக் கடலாக ஆகிவிட்டது. சகரனுடைய குமாரர்களுக்கு சகரர்கள் என்று பெயர். அவர்கள் தோண்டியதால் சாகரம் என்ற பெயர் கடலுக்கு உண்டாயிற்று. சகரர்களின் முயற்சியால் கடல்கள் தோண்டப்பட்டுக், கடைசியாகப் பூலோகத்தின் அடித்தட்டைப் பொத்துக்கொண்டு பாதாள லோகத்திற்குள் அந்த 60,000 அரசகுமாரர்களும் குதித்தனர்.

பூலோகத்தில் குதிரையைத் தேடுவதை விட, அதிகக் கடினமானதாக இருந்தது பாதாளலோகத்தில் தேடுவது. சகரர்கள் அங்கு திரிந்து, கடைசியாகக் குதிரைக் கட்டப்பட்டிருந்த இடம் வந்தனர். மரத்தில் குதிரைக் கட்டப்பட்டிருந்ததையும், பக்கத்தில் ஒருவர் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதையும் பார்த்தவுடன், சகரர்களுக்கு அந்த முனிவரின்மீது சந்தேகம் உண்டாகிவிட்டது, நாம் இவ்வளவு காலம் தேடவும், இந்தக் கண்மூடி அந்தக் குதிரையைக் களவாடிவந்தானோ என்ற சந்தேகத்துடன் சகரர்கள் அந்த முனிவரைத் தட்டியெழுப்பி, “இந்தக் குதிரை எப்படிவந்தது?” என்று கேட்டனர், அந்த முனிவர் பூலோகத்தில் தவஞ்செய்தால் இடையூறு வருகிறதென்று பாதாளலோகம் போய் தனிமையான இடத்தில் அவர் தவஞ்செய்ய வந்தார். மேலும் அந்த முனிவர் தவஞ்செய்யும்பொழுதுதான் விழித்து நோக்கினால் முதற் பார்வையில் எதிரில் நிற்கிறவர்கள எரிந்து சாம்பலாகப் போகவேண்டுமென்ற வரத்தைப் பெற்றிருந்தார். இத்தகைய அருமையான வரத்துடன், இந்த முனிவர் கண்ணைமூடிக் கொண்டிருக்கிறார் என்று சகரர்களுக்குத் தெரியாது. எனவே அவர்கள் தட்டியெழுப்ப, முனிவர் கண்விழித்தார்! அவ்வளவுதான்; அவருடைய பார்வையில் பட்டு, வைக்கோற் பொம்மைகள் பற்றி எரிவதுபோல, அந்த அறுபதினாயிரம் பேர்களும் எரிந்து, சாம்பலாயினர்! முனிவர் பழையபடி கண்ணை மூடிக் கொண்டார், மரத்தில் குதிரை கட்டியபடி இருந்தது, சுற்றிலும் அறுபதினாயிரம் சாம்பல் முட்டுகள் இருந்தன.

யாகத்திற்காக அனுப்பிய குதிரை காணாமற் போய்விட்டது, அந்தக் குதிரையைத் தேடிப் போன அரசகுமாரர்களும் காணாமற்போய்விட்டனர். அவர்களைத் தேடிவரச் சகரன் புறப்பட்டான்.

சகரன் தன் வாழ்நாள் பூராவும் தேடியும் பிள்ளைகளையும், குதிரையையும் கண்டுபிடிக்க முடியவில்லையாம். அவன் காலத்திற்குப்பின் அவனுடைய பேரனான அசமஞ்சன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவனும் சகரர்களையும், குதிரையையும் தேடினான். கடைசியாகப் பாதாளலோகம் சென்று, முனிவரை வேண்டிக் குதிரையைப்பெற்று, பாட்டன் செய்ய விருந்த யாகத்தைச் செய்துமுடித்தான்.

யாகக்குதிரை அகப்பட்டபோதிலும், பாதாளலோகத்தில் இறந்துபோன அறுபதினாயிரம் சகரர்களுக்கும் கருமாதி காரியங்கள் செய்யப்படாமையால் சொர்க்கத்திற்குள் அனுமதிக்கப்படாமல் இருந்தனராம். இக்குறை அசமஞ்சனுடைய பேரனான பகீரதன் என்பவனால் நீக்கப்பட்டதாம். பகீரதன் பிரம்மாவை நோக்கித் தவஞ்செய்து, பின் சிவனை நோக்கித் தவஞ்செய்து தெய்வலோகத்திலிருந்த கங்கையை பூலோகத்திற்கு வரவழைத்தானாம்—அதுவரை பூலோகத்தில் கங்கையாறு என்று ஒன்று இல்லாது, இருந்திருக்க வேண்டும். பகீரதனுக்கு வரம் கிடைத்ததும் திடீரென்று கங்கை பிரவாகமெடுத்து ஓடிவந்தது. அந்தக் கங்கைநதியைப் பகீரதன் அழைத்துக் கொண்டு, சமுத்திரங்களின் அடியிலுள்ள வழியாகப் புகுந்து பாதாளத்திற்குள் போனான். அங்குகிடந்த சகரர்களின் சாம்பல் மீது கங்கையின் புண்ணிய தீர்த்தம் பட்ட உடனே அந்த ஆத்மாக்களுக்குச் சொர்க்கலோகத்திற்குள் நுழைய அனுமதி கிடைத்ததாம். பிதுர்க்களைத் திருப்திபடுத்தியதும் பகீரதன் தன் அரசை நடத்தினான் என்று கூறப்படுகிறது.

அசுவமேத யாகம் நடைபெறக்கூடாது என்பதற்காக யாகக் குதிரையைத் திருடியதுடன், 60,000 சகரர்களும் இறந்துபோவதற்கும் இந்திரன் காரணமாக இருந்திருக்கிறான்.

இந்திரன் செய்த இடையூறால், சகரன் நடத்த இருந்த யாகம் தடைப்பட்டு அவனுடைய பேரன் காலத்தில் யாகம் முடிவடைந்தது. சாம்பலான சகரர்களுக்கு பேரனுக்குப் பேரன் காலத்தில் நற்கதிகிடையாது. இவ்வளவுக்கும் சகரனோ, அவன் குமாரர்களோ தேவர்களுக்கு எந்தவகையிலும் துன்பம் விளைவித்தவர்களல்ல. இருப்பினும் இந்திரன், அவர்களது யாகத்தைக் கெடுத்ததுடன். அவர்களுக்குப் பெருந்துன்பம் இழைத்தான்.

கங்கையைப் பூமியில் கொண்டுவர, பகீரதன் 30,000 ஆண்டுகள் தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. அவன் கொண்டுவந்ததால் கங்கைக்குப் பாகீரதி என்ற பெயரும் உண்டாயிற்றாம். இந்தக் கதை வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது, கம்ப இராமாயணத்திலும் பால காண்டத்தில் அகலிகைப்படலத்தில் இருக்கிறது.

இதைப்போலவே இந்திரன் குதிரை திருடிச் செல்லும் கதை மச்சபுராணத்தில் இருக்கிறது. அதில் மிருது சக்கரவர்த்தி என்பவர் அசுவமேதயாகம் நடத்தினார், வழக்கம்போல் யாகக் குதிரையைத் திருடிக்கொண்டு இந்திரன் ஓடினான். அவனைப் பின்பற்றிப், பிருது சக்ரவர்த்தியின் குமாரன் விசித்திரசுவன் என்பவன் துரத்திக்கொண்டு வந்தான். விசித்திரசுவன் மகாவீரன். இந்திரனை எட்டிப் பிடித்தும், நையப்புடைத்து யாகக் குதிரை[ை] மீட்டுவந்தான். யாகக்குதிரை வந்ததும் பிருது சக்ரவர்த்தி யாகத்தை ஆரம்பித்தார். இரண்டாவது தடவையாக யாகக்குதிரை காணாம[ல்] போய்விட்டது.

விசித்திரசுவன் மறுபடியும் கிளம்பிப்போய் இந்திரனைக் கையுங்களவுமாகப் பிடித்து[க்] கொண்டான். இரண்டாவது தடவையிலும் இந்திரனுக்கு மகத்தான தோல்வி கிடை[த்]தது. விசித்திரசுவன் குதிரையை அழை[த்]துக்கொண்டு தன்னிடம் போனான். தேவரு[ல]கத்தரசன் கேவலம் ஒரு மானிடனிடம் அ[டி]யும் உதையும் வாங்கிக்கொண்டு தேவருலக[ம்] சென்றான்.

இரண்டுதடவை மானமிழந்தும், பிருதுவின் யாகத்தை எப்படியாவதுக் குலைத்துவி[ட] வேண்டும் என்று இந்திரன் திட்டமிட்டப[டி] இருந்தான். இதைக் கேள்விப்பட்ட பிருது சக்ரவர்த்திக்குக் கோபம் வந்தது. இந்திரனை[க்] கொலைசெய்துவிட்டு மறுவேலை என்று கிள[ம்]பினாராம். பிரம்மதேவன் அவர்முன்தோன்றி சமாதானப்படுத்தி, இந்திரன் உயிரைக் கா[ப்] பாற்றினாராம்.

(தொடரும்)

●●

கடனென்றால்......

பலரைக் கேட்டும் பணம் கிடைக்காமல் சோர்ந்து உட்கார்ந்திருந்த மோகனசுந்தரத்திற்குத் தனபால செட்டியார் ஞாபகம் வரவே, எதிரே இருந்த ஹோட்டலுக்குச் சென்று, டெலிபோனை எடுத்து "6576" என்று கூறி, இரண்டு அணா நாணயங்களைப் பெட்டியில் போட்டுப் பேச ஆரம்பித்தான்.

அப்பொழுது டெலிபோன் ஆபீசிலிருந்து நம்பர் கொடுத்தது தனபால் செட்டியார் வீட்டுக்கு எதிர்வீட்டில் வசிப்பவளாதலால், டெலிபோன் உரையாடலை உற்றுக்கேட்க ஆரம்பித்தாள்,

"தனபால் செட்டியார் இருக்காரா? நான் மோகனசுந்தரம் பேசுகிறேன்."

"சுந்தரமா? நான்தான் பேசுகிறேன். என்ன விசேஷம்?"

"ஒன்னுமில்ல, ரொம்ப அவசரமா ஒரு ஐம்பது ரூபாய் வேண்டியிருக்கு, நம்ம பையனை அனுப்புகிறேன்; தயவுசெய்து கடனாகக் கொடுத்தனுப்பவும் நாளை மறுநாள்......"

"என்ன......?"

"ஒரு ஐம்பது ரூபாய் அவசரமா வேண்டியிருக்கு நாளை......"

"என்ன சொல்றேன்னு புரியலிய......"

"**ஐம்பது ரூபாய் கடனாக வேண்டும்**" என்று கத்தினான் சுந்தரம்.

"ஏதோ லயன்லே தகராறுன்னு நினைக்கிறேன். பேசுறது ஒன்னுங் கேக்கலிய......!"

டெலிபோன் ஆபீசில் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பெண், இடைமறித்து,

"லயன், நன்றாகத்தான் இருக்கிறது, அவர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் நன்றாக என்னால் கேட்க முடிகிறதே!" என்றாள்.

"ஓகோ...அப்படியா! பிறகு நீயே அவர் கேட்கும் ஐம்பது ரூபாயைக் கொடுப்பதுதானே...!" என்று கோபமாகக் கூறிப் போனை வைத்தார் செட்டியார்.

பனி வெளியில்

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலாவிடமிருந்து எத்தகைய விபரங்களையும் தெரிந்துகொள்ளமுடியாது போனதும் குலசேகரன் எழுந்துபோய்விட்டான். சித்தசுவாதீனமற்ற நிலையில் சகுந்தலா தன் தற்கொலைக்குத் தயாராளுள் என்று வாதிட வேண்டுமென்று அவன் நினைத்தான். ஆனுலும், தற்கொலைக்கு முன்போ, அல்லது பிறகோ அவள் சித்தப்பிரமையுடன் இருந்ததாகக் கூறமுடியவில்லை. தங்கத்தின் அழைப்பின்பேரில் மனோதத்துவ டாக்டர் ஒருவர் வந்து, சகுந்தலாவைப் பரிட்சைசெய்துவிட்டுப்போனுர். அவர் அபிப்பிராயப்படி, சகுந்தலா மனச்சோர்வடைந்து இருக்கிருளே யொழிய, சித்தப்பிரமையுடன் இருப்பதாகக் கூறமுடியாது என்று ஏற்பட்டது சகுந்தலாவின்மீது போடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் கடுமையானவை என்பதுமட்டும் தங்கத்திற்குத் தெரிந்தது. தற்கொலைக்கு முயற்சி செய்து, அதில் தனது குழந்தையைக் கொன்றுவிட்ட குற்றம் இருந்தபடியால், அதிகத் தண்டனைகள் தரவல்ல குற்றச்சாட்டுகள் இருக்கும் என குலசேகரன் கூறினுன். ஆனுல் தன்மீது போடப்பட்ட வழக்கைப் பற்றியோ, வீசப்படும் குற்றச்சாட்டுகளைப் பற்றியோ, தரப்படும் தண்டனையைப்பற்றியோ சகுந்தலா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. யாரிடமும் எதுவும் பேசாமல் தனது அறையில் அடைந்துகிடந்தாள். குற்றவாளிகள் வெளிச்சத்தை விரும்புவதில்லை என்று கூறுவார்கள். அதைப்போல், சகுந்தலா வெளிச்சத்தைப் பார்க்க மறுத்துக், கதவுகளை நன்ருக அடைத்துக்கொண்டு, அறைக்குள் அடுத்துக்கொண்டாள். யாரிடமும் எதுவும் பேசுவதில்லை, கேள்விகள் கேட்டால் அலட்சியத்துடன், ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதில் சொன்னுள். சகுந்தலாவின் போக்கு தங்கத்திற்குக் கோபத்தைக் கொடுத்தது. சகுந்தலாவின் வழக்கைப் பற்றி தான் ஏன் அவ்வளவு அக்கரை காட்டவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

இரண்டாவது தடவையாக குலசேகரன் மறுநாள் மாலை வந்தான். தங்கம் சகுந்தலாவை அழைத்துவந்தாள். தங்கமும், குலசேகரனும் பேசிக்கொண்டிருந்தார்களே யொழிய, சகுந்தலா அசையாது உட்கார்ந்திருந்தாள். வழக்கைப்பற்றி இருவரும் எதுவும் குறிப்பிடவில்லை. குலசேகரன் எழுந்து போனதும், சகுந்தலா பழையபடி தனது அறைக்குப் போய்விட்டாள்.

தங்கம் தனியாக உட்கார்ந்திருந்தாள்.

“டாக்டர் என்ன யோசித்துக்கொண்டிருக்கிருர்?” என்று கமலநாதன் உள் நுழைந்தான்.

“ஒன்றுமில்லை, இந்தக் கேஸ்தான் என் மன நிம்மதியைக் கெடுத்துவிடும்போலிருக்கிறது.”

“எந்தக் கேஸ்? ஆஸ்பத்திரியில் ஏதாவது ஆபத்தான கேஸா?”

“ஆஸ்பத்திரியில் இல்லை, எல்லாம் உங்கள் கோர்ட் கேஸ்தான்! சகுந்தலாமீது போடப்பட்டிருக்கும் வழக்குதான், அது நாளைக்கு வருகிறது. சரியானபடி விபரங்கள் தெரியவில்லை. சகுந்தலாவிற்குச் சித்தசுவாதீனமில்லை என்று வாதிக்கலாம் என்று சேகரன் சொல்லுகிருன். ஆனுல்...”

கமலநாதன் இடைமறுத்து “தங்கம்! அந்த வழக்கைப்பற்றி என்னிடம் ஒன்றும் விவாதிக்கவேண்டாம்” என்று சொன்னுன்.

“ஏன்? நீங்கள்தான் சகுந்தலா பக்கம் வாதிடப்போவதில்லை என்று முன்பே சொல்லி

விட்டீர்களே! சேகரன்தான் வாதிடப்போகி ருன். அதில் உள்ள சிக்கலைப் பற்றி உங்க ளிடம் சொல்கிறேன், எப்படித் தீர்க்கலாம் என்று.''

"அதுதான், என்னிடம் யோசனை ஒன்றும் கேட்கவேண்டாமென்று சொல்கிறேன்.''

"ஓ!''

"சகுந்தலாவின் மீதுள்ள வழக்கை நடத் தும்படி என்னைக் கேட்டிருக்கிருர்கள். அத ஞல்தான்.''

தங்கம் சற்றுநேரம் திகைத்துவிட்டாள். "நீங்களா?''

"ஏன்? இதில் என்ன ஆச்சரியப்படுவதற்கு இருக்கிறது. அரசாங்கப் பிராசிகியுடர். போலீ சார் தொடுக்கும் வழக்கை நடத்தவேண்டியது தானே கடமை!''

"இதை அன்றைக்கு ஏன் சொல்லவில்லை?''

"இன்று காலையில்தான் கேஸ் கட்டு என் னிடம் வந்தது!''

"அவளைக் குற்றவாளி யென்று நினைக்கி றீர்களா?''

"குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. குற்ற வாளியா? அல்லவா? என்று தீர்மானிக்க வேண்டியது நீதிபதியாகும். குற்றம் செய்ய வில்லையென்று நிரூபிக்கப்பட்டால், விடுதலை செய்யப்படுவாள். குற்றவாளியென்று நிரூபிக் கப்பட்டால், தண்டனை கிடைக்கும்.''

மேற்கொண்டு பேச்சை வளர்த்த தங்கத் திற்குப் பிரியமில்லை, எழுந்து நடந்தாள்.

"ஆனல், சகுந்தலாவை நம வீட்டிலேயே வைத்திருக்கவேண்டாம். ஒருவேளை விடுதலை செய்யப்பட்டால், அதைப்பற்றித் தவருக நினைத்துக்கொள்வார்கள்!'' தங்கம் வெளியே [illegible] சென்றனள். கடைசிக் [illegible]பொழுது கமலநாதன் சொன்னுன்: தங்கத் திற்கு அது ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. "ஒருவேளை அவள் விடுதலை செய்யப்பட லாம்'' என்று தங்கம் தனக்குள் சொல்லிக் கொண்டாள். "ஒருவேளை'' என்று கமல நாதன் சொன்னதால், பெரும்பாலும் அவள் தண்டிக்கப்பட்டுவிடுவாளோ, என்ற பயமும் அவளுக்கு உண்டானது.

* * *

வழக்கு ஆரம்பமானது. முதல் சாட்சியான போலீஸ்காரன் ஆறுமுகம் விசாரிக்கப்பட் டான்.

"கடற்கரைக்குப் போய், மூர்ச்சையாகி கிடந்த பெண்ணையும், இறந்துகிடந்த கு தையும் எடுத்துவந்தது நீதானே?''

"ஆமாம்!''

"மூர்ச்சையாகிக்கிடந்த பெண்தான், இ தக் குற்றவாளி என்று சந்தேகமறத் தெ யுமா?''

"சந்தேகமில்லாமல், அதே பெண்தான் என்று குற்றவாளிக் கூண்டில் நிற்கும் சகு தலாவைப் பார்த்தான்.

"நீ போனபொழுது மணி என்ன இரு கும்?''

"மணி பன்னிரண்டுக்குமேல் பத்து நிமி மிருக்கும்.''

"பிறகு பெண்ணையும், இறந்த குழந்தை யும் போலீஸ் வானில் போட்டு ஆஸ்பத்தி யில் கொண்டுபோய் சேர்த்தது நீதானே?''

"ஆமாம்!''

"மூர்ச்சை தெளிந்ததும், போலீஸ் ஸ்டே னுக்கு அழைத்தபொழுது அந்தப் பெண் வ மறுத்தார்களா?''

"முதலில் பயந்து உள்ளே ஓடினர்க பின் தாளுகவே வந்துவிட்டார்கள்.''

"தற்கொலை செய்துகொள்ள முயன் தாகக் கூறியபொழுது, அந்தப் பெண் ஏத வது மறுத்து அப்பொழுது சொன்னர்களா

"ஒன்றும் சொல்லவில்லை.''

"தற்கொலையல்ல, தவறி விழுந்தது என் ஏதாவது காரணம் அப்பொழுது சொல் வில்லை.''

"எதிரி அப்படி ஒன்றும் சொல்லவில்லை.''

கமலநாதன் தனது கேள்விகளை முடித்து [illegible] அதிக [illegible] உட்கார்ந்ததும் கோர்ட்டில், அதிக கூட்டமில்லை. பின்னலிருக்கும் பெஞ்சியி தங்கம், டாக்டர் சஞ்சீவி, மற்றும் அனை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ஓரிருவர் உ கார்ந்திருந்தனர். சாட்சியை விசாரிக்கு போது தங்கம் தன்னை உற்றுப் பார்த்து கொண்டிருப்பதை அவன் உணராமலில்லை.

எதிரியின் பக்கம் வாதாட விருக்கும் கு சேகரன் எழுந்தான்.

"நீ போனபொழுது குழந்தை இறந்துகி ததா?''

" ஆம்."

" பெண் மூர்ச்சையாகிக்கிடந்தார்களா ?"

" ஆமாம்."

" எப்படித் தெரிந்தது."

" குழந்தையைத் தொட்டுப் பார்த்தேன். ல்லிட்டிருந்தது. மூச்சு இல்லை. நாடித் துடிப் பும், இருதயம் அடித்துக்கொள்வதும் இல்லை. பக்கத்திலிருந்தவர்களும் அதைப் பார்த்துச் சொன்னார்கள்."

" நீ பார்த்ததை மட்டும் சொன்னால் போதும். ந்திரி மூர்ச்சையாகிக் கிடந்தது எப்படித் தெரியும் ?"

" உணர்வு இல்லையே யொழிய, நாடித் துடிப்பு இருந்தது, லேசாக முச்சும் வந்து காண்டிருந்தது."

" மற்றொன்று.குழந்தையும், தாயும் எப்படிக் கிடந்தார்கள் ?"

" கடற்கரையோரத்தில், பக்கத்தில் !"

" தண்ணீருக்குப் பக்கத்தில் பெண் கிடந் தா ?"

" ஆமாம்."

" குழந்தை கரையில் சற்றுத் தள்ளிக் கிடந் தா ?"

" ஆமாம் !"

" சரி."

குலசேகரன் உட்கார்ந்தான்.

அடுத்த சாட்சியாக, கடற்கரைக்குப் போகும் வழி ஆரம்பத்தில் இருக்கும் வெற்றிலைக்கடைக் காரன் விசாரிக்கப்பட்டான். சகுந்தலாவை அடையாளங் காட்டியதுடன், அவள் குழந் தையைத் தூக்கிக்கொண்டு கடற்கரைப் பக்கம் போனதைத் தான் பார்த்ததாகவும் கூறினான். லசேகரன் அவனைக் குறுக்கு விசாரணை ணறும் செய்யவில்லை.

மூன்றாவது சாட்சியாக இருளப்பன் என்ற செம்படவன் வந்தான். கமலநாதன் முதலில் விசாரித்தான்.

" நீதானே கடற்கரையில் அந்தப் பெண்ணை தூக்கிவந்தது."

" ஆமாம், தூக்கிவரவில்லை; இசுத்துப் போட்டேன்."

" நீ இழுத்துப்போட்ட அதே பெண்தான் இதோ கூண்டிலிருக்கிற எதிரி என்று சொல்லமுடியுமா ?"

" கொஞ்சங்கூட சந்தேகமில்லாமல்."

" நீ கடற்கரையில் நின்றுகொண்டிருந்தாய், அப்பொழுது அலைகளில் மத்தியில் அந்தப் பெண் தத்தளிப்பதைப் பார்த்தாய். அப்படித் தானே !"

" ஆமாம். அப்படித்தாங்க. அப்போதான் கட்டுமரத்தை இசுத்துக் கரையில்போட்டு விட்டு உட்கார்ந்தேன். பார்த்தா, மீன் துள் ளுகிறமாதிரி, அலையில் தெரிஞ்சுது. பக்கத் தில் ஓடினே, அப்புறம் பொம்பளை அலையில் மோதறது தெரிஞ்சுது."

" உனக்குக் கடலில் நீந்தத் தெரியுமா ?"

" என்னங்க, அப்படிக் கேட்டுட்டீங்க ! நடுக்கடலில் குதிச்சுக் கரைக்கு வந்து சேர்ந்து விடுவேன் !"

" நீ அந்தப் பெண்ணை இழுத்து வந்து போட்டபிறகு முத்தன் முனியன் இவர்களை யும் கூப்பிட்டாயா?"

" கூப்பிட்டனு ! எம்மா சத்தம் கொடுத் தேன் தெரியுமா ! அதற்குள் பத்துப் பதி னைஞ்சு பேரு வந்து கூடிட்டாங்க !"

" போலீஸ் வருகிற வரைக்கும், அப்படியே மூர்ச்சையாகத்தான் இருந்ததா ?"

" முதலில் மூச்சு பேச்சு இல்லை. ஒரு சக்கரத் தில் போட்டு சுத்திறோம். வாயிலிருந்து தண் ணீர் வந்தது. பின் லேசா மூச்சுவிட ஆரம் பித்தது."

" மூர்ச்சை தெளியவில்லை."

" கண்ணைத் திறந்து பார்க்கவில்லை."

" இதுமாதிரி இதற்குமுன் யாராவது வந்து அந்தக் கடலில் விழுந்து தற்கொலை பண்ணிக் கொண்டதுண்டா ?"

" உசிரை விடணும்னு நினைக்கிறவங்க, அந் தக்கரைக்குத்தான் வருகிறுங்க ! என்னு தெரி யலை. மாசத்துக்கு ஒன்று ஏதாவது ஒரு பிணத்தை இசுத்துப் போட்டுக்கிட்டுதான் இருக்கோம்."

கமலநாதன் மேலும் சில கேள்விகளைக் கேட்டுவிட்டுக் கடலில் விழுந்தபொழுது சகுந் தலா அணிந்திருந்த ஆடைகளைக் காட்டினான். இருளப்பன் அவற்றை அடையாளங்கண்டு சரியாகச் சொன்னான்.

குற்றக்கூண்டில் நின்றுகொண்டிருந்த சகுந்தலாவிற்குக் கால் வலியெடுத்தது. கால் மடங்கி விழுந்துவிடுபவள்போலானாள். இதைக் கவனித்த தங்கம் குலசேகரனிடம் வந்து, சகுந்தலாவின் பலவீனத்தைப் பற்றி சொன்னாள். இதுவரை சாட்சிகளைப் பற்றிக் கவனித்துக்கொண்டிருந்த குலசேகரன் சகுந்தலாவைப் பற்றி மறந்துவிட்டான். தங்கம் சொன்னதும், குலசேகரன் எழுந்து, “எதிரி பலவீனமான நிலையிலிருக்கிறபடியால், உட்காருவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டான் கோர்ட்டாரும் அனுமதித்தனர்.

“நீதானே அந்தப் பெண்ணை இழுத்துவந்து கரையில் போட்டது?” என்று குலசேகரன் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்ய ஆரம்பித்தான். கேள்விகளுக்குப் பதில் சொல்லி சாட்சி களைத்துவிட்டதாகத் தோன்றியது.

“இதென்னங்க, திருப்பித்திருப்பி அதையேக் கேக்கிறீங்க! இவ்வளவு கேள்வி கேப்பீங்கன்னு அப்பவே தெரிஞ்சிருந்தா, அந்தப் பெண்ணை இசுத்துப் போடாம, நாபாட்டுக்கு போயிருப்பே.”

“நீ செய்தது நல்ல காரியம்தான்! ஒரு உயிரைக் காப்பாற்றியது நல்லதுதான்.”

“உசிரைக் கொன்னாலும் இங்கே வந்து கேள்விக்குப் பதில் சொல்லவேண்டி யிருக்கு! உசிரைக் காப்பாத்தினாலும் இங்கே வந்து கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியிருக்கு!”

கோர்ட்டிலிருப்பவர்கள் சிரித்துவிட்டார்கள். பிறகு கோர்ட் பணியாள் சத்தமிட, அமைதி நிலவியது.

“நீ பார்த்தபொழுது, அந்தப் பெண் அலைமத்தியில் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள், அல்லவா?” என்று குலசேகரன் மீண்டும் ஆரம்பித்தான்.

“ஆமாங்க.”

“ஆக, அந்தப் பெண் கடலில் இறங்குவதை நேரில் பார்க்கவில்லை.”

“இல்லை.”

“தவறிக்கூட கடலில் விழுந்திருக்கலாம்!”

“தவறி ஏன் விழப்போறாங்க?”

“நீ கேள்வி கேட்கவேண்டாம்! நேரில் பார்க்காததால், அவர்கள் வேண்டுமென்று கடலில் குதித்தார்களா அல்லது தவறி கடலில் விழுந்து கரைக்கு வரமுடியாமல் தத்தளித்தார்களா என்று தெரியாது அ லவா?”

“நிச்சயமாச் சொல்லமுடியாது, ஆனால்...

“அது போதும்! நீ கடலில் குதிச்சு நீந் அருகில் போனபொழுது, அந்தப் பெண்ண டம் குழந்தை இருந்ததா?”

“இல்லை!”

“அப்படியானால், குழந்தை பின் எப்படி கிடைத்தது?”

“நான் வந்துங்க, அந்தப் பெண்ணை இசு துக்கினு வந்து கரைலே போட்டப்போ, அந் குழந்த அலையில அடிச்சுவந்து கரை கிடந்துச்சு.”

“குழந்தையை அப்பொழுதுதான் முத தடவை பார்த்தாய்?”

“ஆமாங்க!”

“குழந்தை கடலில் எப்படி விழுந்தது கரைக்கு எப்படி வந்தது எல்லாம் உனக்கு தெரியாது.”

“தெரியாது. ஆனால், கடலில் விழாம எப்படி கரைக்கு அலையில் வரும்ங்க?”

“அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டா குழந்தை எப்படி அலையில் சிக்கியது, எப்ப கரையில் விழுந்தது என்று உனக்குச் சிறித தெரியாது, அதைமட்டும் சொல்?”

“தெரியாதுங்க!”

“நீ பார்த்தபொழுது, குழந்தை இறந்தி தது, அல்லவா?”

“ஆமாம்.”

“அவ்வளவுதான்!” என்று குலசேகர தன் கேள்விகளை முடித்துக்கொண்டு உ கார்ந்தான்.

சாட்சிக்கூண்டிலிருந்த இருளப்பன் கீழி குவதற்குத் தயாரானான். கமலநாதன் மீ டும் எழுந்து ஒருசில கேள்விகள் கே வேண்டுமென்று கோர்ட்டாரின் அனும யைப் பெற்றான்.

“கடற்கரைக்கு உலாவ வருபவர்கள் சி சமயங்களில் அலையோரத்தில் நின்று தவ கடலில் விழுந்துவிடுவதுண்டல்லவா?”

“அது மாதிரி விழுகிறவங்க உண் என்று இருளப்பன் பதிலளித்தான்.

(தொடரு

இவளைப் பெற்றெடுத்தோர் வாழ்க!

[எழினி]

தொண்டி மாநகரை அடுத்தச் சிற்றூர். எல்லா அழகும் பொருந்திய நம்பி ஒருவனும், வனப்பெல்லாம் படைத்த நங்கை ஒருத்தியும் தற்செயலாக ஒருவரையொருவர் எதிர்படுகின்றனர். அவளைக் கண்டவுடன் அவன் மெய்மறந்து போகிறான்; அவனைக் கண்டவுடன் அவள் உள்ளத்தைப் பறிகொடுத்து மயங்கி நிற்கிறாள். சிறிது நொடியில் இருவரும் தம்மைத் தாமே உணர்ந்துகொண்டு தத்தம் வழியே ஏகுகின்றனர்.

இருவரும் ஒருவரையொருவர் கண்டுபேசிக் கொள்ளாமல், ஆனால் ஒருவருக்கொருவர் சொல்லிவைத்தாற்போல், நாள்தோறும், குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்டநேரத்தில் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். இருவரும் ஒருவரையொருவர் காண்கிறார்கள், கண்கள் ஒன்றோடொன்று பேசிக்கொள்கின்றன. ஆனால் வாய்திறந்து பேசத் துணிவில்லாமல் இருவரும் அகன்று விடுகின்றனர். இப்படியாகப் பலநாட்கள் உருண்டோடுகின்றன. ஒருநாள் யாரும் அற்ற இடத்தில் யாரும் அற்ற நேரத்தில் அவளை அவன் காண்கிறான். அவ்வாணழகன் அவ்விள நங்கையிடம் பேச்சுக்கொடுத்துப் பார்க்கிறான். அவளும் விரும்பி விடை பகர்கிறாள். அவளை இரவுக்குறியிடத்துக் கண்டுபேசி மகிழ்ந்திருக்க வேண்டும் என்ற தனது உள்ளக்குறிப்பை அவன் அவளிடத்தில் வெளியிடுகிறான். அவள் சிறிது நாணமும் அச்சமும் கலந்த குரலில் இசைவினைத் தெரிவிக்கிறாள். இரவு வருகிறது. தலைவனும் தலைவியும குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில், குறித்துக் கொண்டபடி ஒருவரையொருவர் காண்கிறார்கள். இருவரும் நீண்டநேரம் ஆடிப்பாடிக், கூடிக்குலாவிப், பேசிமகிழ்ந்து இன்புற்றிருக்கின்றனர். இருவரும் எவ்வகையிலும் பிரிவுபடா அருங்காதலராகிவிடுகின்றனர். பிறகு பொழுது விடிந்துவிடுமோ என்ற அச்சத்தால் விடியுமுன் தத்தம் இல்லம் சேர்கிறார்கள்.

மறுநாள் காலை தலைவன் ஏதோவொரு வேலையாகத் தொண்டி நகரம் செல்கிறான். தொண்டி நீர்வளப்பமும் நிலவளப்பமும் பெற்று வளமான நகருக்கோர் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்துவருகிறது. பெயரும் புகழும் படைத்து வலிவானதேர்ப்படையைக் கொண்டிருக்கும் பொறையன் என்ற சேரமன்னனின் ஆளுகையின் கீழ்த் தொண்டி விளங்குகிறது. தொண்டி தனக்கேயுரிய இயற்கைச் சிறப்புகளோடு, சேரமானின் அருந்தொண்டால் விளைந்த செயற்கைச் சிறப்புகளையுங் கொண்டு ஈடும் எடுப்பும் அற்றுவிளங்குகிறது. தொண்டியைச் சுற்றியுள்ள வளமிக்க வயல்களிலே செந்நெற்கதிர்கள் குவிந்துகிடக்க. நீர்நிலைகளிலும் வயலோரங்களிலும் கண்ணைப் போன்று விளங்கும் மலர்களையும் வலிவான தண்டினையும் கொண்ட நெய்தற்கொடிகள் படர்ந்துகிடக்கின்றன. உழவர்கள் நெற்கூட்டோடு நெய்தற்கொடிகளையும் ஏராளமாகக் கொய்துகொண்டு வருகிறார்கள். நெற்கதிர்களைப்போரெனக் குவிக்கிறார்கள்; நெய்தற்பூக்கள் நெற்போரின்கண்ணே பூத்தனபோல காணப்படுகின்றன. இப்படிப்பட்ட வளமான காட்சிகளையும், தொண்டியின் இயற்கை—செயற்கைச் சிறப்புகளையும் பார்த்துக்கொண்டே தலைவன் தொண்டி நகரம் போய்ச்சேருகிறான்.

அதேநாளில் தலைவியும் அவளது குடும்பத்தாரும், உறவினரும் சேர்ந்து கூட்டமாகத் தொண்டி நகரம் வந்திருக்கிறார்கள். தலைவன் எங்கேயோ செல்லும்போது, எதிர்பாராத நிலையில் தலைவி அவளது உற்றார் உறவினரோடு எதிர்ப்பக்கத்தில் வந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறான். தலைவி அவனது கண்களில் தட்டுப்பட்டதும் இன்ப உணர்வு அவன் உடல் முழுவதும் ஓடி மறைகிறது; உடல் புளகாங்கிதம் கொள்கிறது. வியப்புணர்ச்சியும் மகிழ்வுணர்ச்சியும் தோன்ற தலைவியின் அசைவுகளையும் நடமாட்டத்தையும் பார்த்துக்கொண்டே நிற்கிறான். எங்கேயோ தற்செயலாகத் திரும்பியவள் தன் அன்பிற்குகந்த தலைவன் நிற்பதைப் பார்த்துவிடுகிறாள். அகமகிழ்வும் அச்சமும் உள்ளத்தே எழ, தன் ஆடை அணிகலன்களை நன்கு சீர்

படுத்திக்கொண்டு, ஏதுமறியாதவள்போல் வேறுபக்கம் திரும்பி, வேடிக்கைப் பார்ப்பது போல் எதை எதையோ பார்த்துக்கொண்டே நடக்கிறாள். என்றாலும் அவளால் தொடர்ந்து தன் பார்வையை வேறுபக்கமே செலுத்திக் கொண்டிருக்கமுடியவில்லை ; அடிக்கடித் தலைவன் இருக்கும் பக்கம் கடைக்கண்பார்வையைச் செலுத்திக் காதலன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்று பார்த்துக்கொள்கிறாள். தலைவனும் தெருவின் மற்றொரு பக்கத்தில், ஏதும் அறியாதவன்போல் தலைவியின் கூட்டத்தாரைத் தொடர்ந்து நடந்துகொண்டே, அடிக்கடிப் பார்வையைமட்டும் காதலியின் மீது செலுத்திக்கொண்டு வருகிறான். தலைவன் முதல் நாள் இரவு நடைபெற்ற இன்ப நிகழ்ச்சிகளைப்பற்றியெல்லாம் நினைந்து நினைந்து மகிழ்ந்துகொண்டே காதலியைப் பார்க்கிறான்; பெருமகிழ்ச்சிகொள்கிறான்.

"யாரும் அசைக்காத என் உள்ளத்தை இவள் எப்படியோ கொள்ளைகொண்டுவிட்டாளே!" என்று தலைவன் தனக்குள்ளே எண்ணிக்கொள்கிறான். அவளை மீண்டும் உற்றுப் பார்த்து அவளது அழகைப் பருகுகிறான். தழைகளோடு பூக்களும் விரவித் தொடுக்கப்பட்டமாலை; அவள் அடிவயிற்றின் மேல் கிடந்து, அவள் நடக்க நடக்க அழகுற அசைவதைக் காண்கிறான்; நீலமணி போன்று ஒளிவீசும் அவளது மேனியைக் காண்கிறான் ; அவள் கடைக்கண் செலுத்தும்போது அவளது கண்களில் செவ்வரிகள் அழகுற படர்ந்திருப்பதையும், அவளது கண்கள் ஒருவிதக் குளிர்ச்சியை அளிப்பதையுங் காண்கிறான், அவ்வளவிலே இறும்பூதெய்துகிறான். முதல் நாள் இரவு நீண்டநேரம் தூக்கமில்லாமல் விழித்திருந்தபடியால், அவளது கண்கள் மிக்க துன்பம் அடைந்திருக்கும் நிலையையும் காண்கிறான். அவள் தன்பால் செலுத்திய அன்பை நினைந்து அகமகிழ்கிறான்.

"இவளுடைய தாய்தந்தையர்கள் யாராக இருப்பார்கள்?" என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டு, காதலியோடு உடன்வரும் கூட்டத்தினரிடை, தாய் தந்தையர் யாராக இருக்கக்கூடும் என்று தேடும் முறையில் தன் பார்வையைச் செலுத்திப் பார்க்கிறான். அவனு[ல்] அவ்வளவு எளிதாகக் கண்டுபிடிக்கமுடி[ய]வில்லை. "யாராக இருந்தாலும், இவ்வள[வு] அழகுடையவளைப் பெற்று எனக்கு உத[வி] இவளது தந்தை நெடுங்காலம் வாழ்வாராக" என்று மனதினால் வாழ்த்துகிறான்.

காதலியின் தாய் யாராக இருக்கக்கூடு[ம்] என்று கவனித்துப் பார்க்கிறான். தெளிவாக புலப்படவில்லை. "இவளை ஈன்ற தாய் யார[ாக] இருந்தாலும், இந்தத் தொண்டிமாநக[ர்] எவ்வளவு வளப்பமும் சிறப்பும் கொண்[டு] இருக்கிறதோ அவ்வளவு வளப்பத்தை[யு]ம் சிறப்பையும் பெற்று அவள் வாழ்வாளாக" என்று நெஞ்சால் வாழ்த்துகிறான்.

"இவளுடைய தாய்தந்தையர் இவ[ளை] எனக்கு மனம் ஒப்பி மணம்முடித்துத் த[ரு]வார்களோ?" என்று எண்ணி சற்[று] திகைப்புகொள்கிறான். "இவள் என்னி[டம்] செலுத்தும் அன்பினைப் பார்க்கும்போ[து] இவள் என்னைத்தவிர வேறுயாரையும் ம[ண]ம் செய்துகொள்ளவே மாட்டாள். உறுதிய[ாக] என்னைத்தான் மணந்துகொள்வாள். இவ[ள்] தன் தாய்தந்தையர்களை எப்படியும் இசை[ய] வைக்கக்கூடியவளே!" என்று தனக்கு[த்] தானே எண்ணிக்கொண்டு பூரிப்போடும் பெ[ரு]மிதத்தோடும் அவளை மற்றுமொருமுறை பார்க்க அவள் பக்கம் பார்வையைச் செலுத்[து]கிறான். அதேபோது அவள் கடைக்கண்ணா[ல்] அவனை ஒருமுறை பார்க்கிறாள். பின்ன[ர்] அவள் தன் ஆயத்தாரோடு தன் சேரிப்பக்க[ம்] திரும்பிவிடுகிறாள். தலைவன் வேறுவழியின்[றி] ஆனால் காதலியைப் பார்த்தோம் என்[ற] மகிழ்ச்சியோடு தன் சேரிப்பக்கம் நோக்கி[ச்] செல்கிறான்!

ஃ ஃ ஃ

நற்றிணை-8 ஆம் பாட்டின் உள்ளக்கி[ட]க்கையை அடிப்படையாக் கொண்டு வரைய[ப்]பட்ட சொல்லோவியமே மேலே காட்டப்ப[ட்]டிருப்பதாகும். இந்தச் செய்யுளை இயற்றி[ய] ஆசிரியர் யார் என்பது அறியக்கூடவில்லை.

ஃ ஃ ஃ

அல்குபட ருழந்த அரிமதர் மழைக்கண்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குல்
திருமணி புரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லிவள் தந்தை வாழியர்

துயரம் உறீஇயினள் எம்மே அகல்வயல்
அரிவனர் அரிந்துந் தருவனர் பெற்றுந்
தண்சேறு தாஅய் மதனுடை நோன்தாள்
கண்போல் நெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் தொண்டி
தன்திறம் பெறுகஇவள் ஈன்ற தாயே.

[நற்றிணை—8]

[பொழிப்புரை : *மிக்க துன்பப்பட்ட செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ச்சியையுடைய கண்களையும், பலவாகிய பூக்களுடனே மாறிமாறித் தொடுக்கப்பட்ட தழையுடையை அசையும்படி உடுத்த அல்குலையும், அழகிய நீலமணியொத்த மேனியையுமுடைய இவ்விளமகள் யாவர் புதல்வியோ? அசையாத உள்ளத்தையுடைய எம்மையே துயரஞ்செய்தனளே! இத்தகைய திறம் வாய்ந்தவளைப் பெற்று எனக்குதவிய இவளது தந்தை நெடுங்காலம் வாழ்வானாக; இவளை ஈன்ற தாயும் அகன்ற வயலின்கண்ணே மள்ளரால் அரியப்பட்டும் அரிச்சூட்டை எடுப்போராற்கொண்டு வரப்பட்டும் குளிர்ந்த சேறு பரந்து அழகுடைய வலிய தண்டினையுடைய கண்போல்கின்ற நெய்தல், நெற்போரின்கண்ணே மலரும்படியானதும், திண்ணிய தேரையுடைய பொறையனதுமான தொண்டி நகர் போன்ற சிறப்பினைப் பெறுவாளாக! அல்குபடர் - மிக்க துன்பம்; அரி – செவ்வரி; கண்ணில் காணப்படும் சிவந்த சோடு; மதனுடை – அழகுடைய; நோன்தாள் - வலிய தண்டு.*]

காதலியோடு கூடிக்குலாவி இன்பந்துய்த்த காதலன், பிறகு காதலியை அவளது சுற்றத்தாரோடு காணும்போது எப்படிப்பட்ட உணர்ச்சிக்குட்படுவான் என்பதைப் புலவர் இப்பாட்டில் அழகுபட உணர்த்தியுள்ளார். காதலியை எந்த அளவுக்கு அவன் விரும்புகிறான், போற்றுகிறான், பெற்றுவிட்டோம் என்பதற்கு மகிழ்கிறான் என்பது அவன் அவளைப் பெற்றெடுத்த தாய் தந்தையரை வாழ்த்துவதிலிருந்தே அறிந்துகொள்ளலாம்.

இந்தச் செய்யுளை இயற்றிய புலவர், தாம் போற்ற நினைத்த பொறையனையும், தொண்டியையும் ஏற்ற இடத்தில் புகுத்திப் போற்றியுள்ளார். பொறையனது தொண்டி எப்படி எல்லாவளனும் பெற்று விளங்குகின்றதோ அப்படியே, காதலியினுடைய தாயும் எல்லாவளனும் பெற்றுத் துய்க்கவேண்டும் என்று காதலன் வாழ்த்துவதுபோல வைத்துப் புலவர் தம் உள்ளக்கிடக்கையை நயம்பட வெளிப்படுத்தியுள்ளார்.

நெற்கதிர்களை அறுக்கும் உழவர்கள் நெய்தற் கொடிகளையும் சேர்த்து அறுத்துவிடுவார்கள் என்பதும், நெற்கதிர்களை சேர்த்துக் கட்டிக்கொண்டு வரும்போது நெய்தற் பூக்களோடு கூடிய கொடிகளும் உடன் சேர்ந்து வந்துவிடும் என்பதும், நெற்கதிர்களைப் போரெனக் குவிக்கும்போது அதில் விரவிக் காணப்படும் நெய்தற்பூக்கள், அந்தப் போரிலே மலர்ந்தவைபோலக் காணப்படும் என்பதும் ஆன இயல்பான காட்சிகளைப் புலவர் அழகுபட இச்செய்யுளின்மூலம் காட்டியுள்ளார்.

திருமணத்திற்குப் பிறகே காதல் என்றபடியில்லாமல், காதலுக்கு வழிகாணப்பட்டபிறகே திருமணத்திற்கான வழியைப் பண்டைக் காலத் தமிழர்கள் கண்டனர் என்பது தெளிவாக அறியப்படுகின்றது. இந்தப் பாடல் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கடமையைச் செய்வோம் காத்திருப்போம்

[இரா. நெடுஞ்செழியன்]

நாம் இதுகாறும் சுட்டிக்காட்டிவந்த சீர்திருத்தங்களையெல்லாம் ஒருநாளிலோ அல்லது ஒரு சில ஆண்டுகளிலோ பெற்றுவிட முடியாது; பல நூற்றாண்டுகள் ஆனாலும் ஆகக்கூடும். இடைக்காலத்தில் ஏராளமான குற்றங்கள் நிகழக்கூடும்; அளவுக்குமீறிய வறுமை தாண்டவமாடக்கூடும்; மிதமிஞ்சிய தேவைகள் வாட்டி வதைக்கக்கூடும்; என்றாலும் இப்பொழுதிருந்தே ஏதாவது செய்யப்படத்தான் வேண்டும். நாம் செய்யும் சிலபல கடமைகள் நமக்கு எதிர்பார்க்கும் பலனை அளிக்காவிட்டாலும், நமது வருங்காலத் தலைமுறையினர்க்காவது நல்ல பலன்கள் பல அளிக்கட்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, நாம் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம்-

ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் தன்மையில் அறிவு ஆற்றல் பெற்றிருக்கவேண்டும்; அதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். வருங்காலத்திற்கும் சேர்த்து நன்மை பயக்கக்கூடிய வழியிலேயே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிந்தனையைச் செலவிடக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவன் தனக்குத் தேவையான அளவுக்குப் பொருள் ஈட்டிக்கொண்டு, தேவைக்கு மேலும் பொருள் ஈட்டிக்கொள்ளக் கூடிய அறிவாற்றல், வாய்ப்பு வசதிகளை உடையவனாக இருந்தால், அவன் தன்னிடம் மிகுந்துள்ள பொருளைக்கொண்டு, வாழ்க்கை வசதியும் அதனைப் பெறுவதற்கான வாய்ப்பும் அற்ற வறியவர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும். ஒவ்வொருவரும் தம்மால் எந்த அளவுக்கு அறிவு — ஆற்றல் — வாய்ப்பு— வசதி அற்றவர்களுக்கு உதவிசெய்யமுடியுமோ அந்த அளவுக்கு உதவிசெய்வதைத் தம் கடமையாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் தம்மால் முடிந்த அளவுக்கு

வீழ்ந்துபட்டவர்களை உயர்த்துவதற்குப் பா
படவேண்டும்; முடிந்த அளவுக்குத் தம்மை
தாமே காப்பாற்றிக்கொள்ள முனைபவர்களுக்
உடனுதவியாக இருக்கவேண்டும்; முடி
அளவுக்கு வேலையற்றோர்க்கு வேலை கொடு
முயலவேண்டும். ஒவ்வொருவரும் அன்
அறிவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஊட்டு
சொற்களையே சொல்ல முற்படவேண்டு
ஒவ்வொருவரும் அவரால் முடிந்த எல்
நன்மைகளையும் செய்யவேண்டும்; தம் உட
வாழ்வோர்க்கு ஏற்படும் துன்பங்களையெ
ல்லாம் துடைக்க முன்வரவேண்டும்; நல்
எதிர்காலம் மலர்வதற்கான எல்லா செய
களையும் அதேபோழ்து செய்யவேண்டும்.

அன்புள்ளங்கொண்டு பிறர்க்கும் உலக
திற்கும் நன்மைபுரியும் தன்மையைத்தா
நாம் உண்மையான ‘சமயம்’ என்கிறோம். த
னால் முடிந்த எல்லா நன்மைகளையும் எவனொ
வன் செய்கிறானோ அவன்தான் பெ
‘மகான்’ ஆவான், உயர்ந்த சிறந்த கருத்த
படி. தன்னால் முடிந்த எல்லா நன்மைகளை
ஒருவன் செய்வது என்பதுதான் உண்
யான ‘ஆத்மீக மார்க்கமா’கும். பிறருடை
துன்பங்களைப் போக்குவதும், பிறருடை
அச்சத்தைப் போக்கி நம்பிக்கையை ஊட்டு
துந்தான் உண்மையான ‘பரிசுத்தத்தன்
யாகும். இதுதான் அறிவியலின்பாற்பட
‘மதமா’கும். பழைமையான கொள்கைகளு
கோட்பாடுகளும் மிகக் குறுகிய நோக்
படைத்தவைகளாகும். இப்பொழுது ந
வாழும் இந்த உலகியல் வாழ்க்கைக்கு அ
ஒரு சிறிதும் பயன்படாதனவாகும். பழை
கோட்பாடுகள் பரந்த நோக்கத்தையும், மெ
மையான மனப்பான்மையையும் கொண்டன
யல்ல. அவைகளில் பெரும்பான்மையான
மிகக் கொடுமைவாய்ந்தனவும், இரக்கமற்ற
வும், காட்டுமிராண்டித் தன்மைகொண்டன

பயன் தரும் பழம்

அன்றுடம் நம் கண்ணெதிரில் படும் பாருள்கள் சிலவற்றின் அருமை பெருமை யைத் தெரிந்துகொள்ளாமலேயே நாம் அவற் றுடு பழகி வருகிறோம். அப்படிப்பட்ட பாருள்களிலே எலுமிச்சம்பழம் ஒன்றாகும்.

எலுமிச்சம்பழத்தை இனிய சாறுபண்ண ம், ஊறுகாய் போடவும், சோறு பிசையவும் ன சிலபல வகைகளில் மட்டுமே நம்மில் பரும்பாலோர் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் அதில் அடங்கிக்கிடக்கும் நூற்றுக் ணக்கான நன்மைகளை அறிந்துகொண்டு, அதனை முழுக்க முழுக்கப் பயன்படுத்தத் தரியாமலேயே நாம் வாழ்ந்துவருகிறோம்.

எலுமிச்சம்பழத்தின் அருமைபெருமைகள் இப்பொழுதுதான் சிறிதுசிறிதாக வெளிப் ட்டு வருகின்றன. சாறுபிழிய, ஊறுகாய் பாட, பச்சடி செய்ய, சோறுபிசைய மட்டுமல் ாமல் மிகவாக வெளிப்படும் குருதியைத் இரத்தத்தை) தடுக்க, பெட்ரோல் ஊற்றும் ாகிதப்பைகளின் உட்புறத்தை வழவழப்பாக ம் பாதுகாப்பாகவும் ஆக்க, மை (இங்க்) றைகளைப் போக்க, மீனின் தீ நாற்றத்தைக் றைக்க, வாழைப்பழம் ஆப்பிள் போன்ற ழங்களின் தோல்கள் கருத்துப்போகாமல் ாதுகாக்க, இரும்பை வலுவாக்க, குருதிக்கு ஏற்ற மாற்றுப் பொருளாக உடலுக்குள் செலுத்த இன்னபிற நூற்றுக்கணக்கான வழிகளில் எலுமிச்சம் பழம் பெரிதும் பயன் பட்டுவருகின்றது.

எதிர்காலத்தில் ஏற்படும்பெரும்பாலானநன் மைகள் எலுமிச்சம்பழத்தோலிலிருந்தே கண்டு பிடிக்கப்படும். எலுமிச்சம்பழத்தோலைப் பற்றி நீண்டநாட்கள் ஆராய்ச்சி நடத்திய அமெரிக்க நிபுணர்கள் தோலிலிருந்து பலவித நன்மை கள் ஏற்படக்கூடும் என்பதை வெளியிட்டிருக் கிறார்கள். அணுக்குண்டு நீர்க்காற்றுக் குண்டு போன்றவைகள் வெடித்து, அவற்றிலிருந்து எழும்பும் வெப்ப அலைகள் மனிதனைத் தாக் குமேயானால், எலுமிச்சம்பழத் தோலிலிருந்து எடுக்கப்படும் ஒருவகைச் சாரத்தின்மூலம், வெப்ப அலைகளால் ஏற்படும் தொல்லைகளைப் போக்கிக்கொள்ளமுடியும் என்று அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எலிகளிடத்தில் இதுபற்றிய ஆராய்ச்சித் தேர்வு நடத்தி அவர்கள் வெற்றியடைந்ததாகச் சொல்லப் படுகிறது. எலுமிச்சத் தோலிலிருந்து எடுக் கப்பட்ட சாரத்தை எலிகளுக்கு உணவாகக் கொடுத்து, சிறிதுகாலம் பழக்கப்படுத்தப் பட்ட பிறகு, வெப்ப அலைகளை அவற்றின் உடலில் செலுத்திப் பார்க்கும்போது,

---

ஆகும். நாம் நாளுக்குநாள் சிறப்பாகவும், பருந்தன்மையாகவும் வளர்ந்துவருகிறோம்.

பல்வேறுவகையான பரிதிகளையும், கோள் ளையும் கொண்டிருக்கும் வானந்தான் உண் மையான கோயிலின் கூடகோபுரமாகும்! இயற்கையின் பல்வேறு கூறுபாடுகளையும் மக்கு விளக்கிக்காட்டுபவர்கள்தாம் உண்மை ான 'புரோகிதர்கள்' ஆவார்கள்! அவர் ளைத் தவிர வேறு 'புரோகிதர்கள்' யாரும் இருக்கமுடியாது! உண்மைகள்தாம் மக்கள் ச்சரிக்கும் உண்மையான 'மந்திரங்களா'கும்! னத்திருப்தியும், மகிழ்ச்சிக் கனவுகளும், பருமை பெறுவதற்குரிய நம்பிக்கைகளுந் ாம் உண்மையான 'வழிபாட்டுரைகளா'கும்! லைகள் தரும் அழகுகள் எங்கெங்கே காணப் படுகின்றனவோ, அந்த இடங்களெல்லாந் தாம் உண்மையான 'கோயில்'களாகும்! உலகில் காணப்படும் இசைகளெல்லாம்தாம் உண்மை யான 'வாழ்த்துப்பாடல்'களாகும்! எண்ணி றந்த உடுக்களின் கீழே விளங்கும் எல்லா நாடு களையும் சேர்ந்த மிகச்சிறந்த மக்கள்தாம் உண்மையான 'ஆத்மா'க்களாவார்கள்!

அறியாமையைக் காட்டிலும் வேறோர் இருள் எதுவும் இல்லை!

நாம், அறிவுடைமை என்னும் வெளிச்சத்தை உலகெங்கும் பரவச்செய்வோமாக!

[முற்றிற்று]

அவை அந்த அலைகளைத் தாங்கிக்கொள்ளும் திறத்தனவாகக் காணப்பட்டனவாம்.

பழக்கறையோ அல்லது இரும்புக்கறையோ வெள்ளைத் துணிகளில் பட்டுவிட்டால், அவற்றைப் போக்க, உப்புகலந்த எலுமிச்சம்பழச் சாற்றைக் கறைபட்ட இடங்களில் தடவினால் கறைபோய்விடும் என்பதை எல்லோரும் பொதுவாக அறியவே செய்வார்கள். எலுமிச்சம்பழம் வெள்ளை உடுப்புகளை வெளுப்பதற்கும் பயன்படுகிறது. அதன் சாற்றைத் தண்ணீரோடு கலந்து, அதில் துணிகளைக் கசக்கிப் பிழிந்தால் அழுக்கு அகன்றுவிடும். அலுமினியக்கலன்களை (பாத்திரங்களை) ஒளியுடையனவாக ஆக்க எலுமிச்சச் சாற்றைப் பயன்படுத்துகின்றனர். எலுமிச்சைச்சாறு மீன்களைத் தீ நாற்றம் வீசாமல் பாதுகாத்துக்கொள்ளும் சிறந்த ஏதுவாகும் என்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மீன் வணிகர்கள் மீன்களைப் பதப்படுத்துவதற்கு முன்போ அல்லது பின்போ எலுமிச்சைச் சாற்றைத் தெளித்துவிடுவதன்மூலம் தீ நாற்றத்தைப் போக்கிவிடுகிறார்கள். தீ நாற்றத்தைப் போக்கும் அந்தச்சாரம் பல்வேறு வகையான மருந்துகளின் உற்பத்திக்குப் பயன்படக்கூடும் என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

எலுமிச்சம்பழம் இந்தியா, பர்மா போன்ற இடைகிழக்காசியா நாடுகளில்தான் முதன் முதல் தோன்றியிருக்கக்கூடும் என்று ஊகிக்கிறார்கள். இந்தியாவில் சில இடங்களில், புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர் நிலத்தை அகழ்ந்து காணும்போது, சிற்சில வேளைகளில் எலுமிச்ச விதைகள் அகப்படுகின்றன. அவற்றின் காலத்தைக் கணக்கிடும்போது அவை கி. மு. 4000-க்கும் முந்தியனவாகத் தென்படுகின்றன. கிழக்கு ஐரோப்பா நாடுகளில் 1600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எலுமிச்சம்பழம் இருந்துவந்திருக்கிறது. அது இந்தியாவிலிருந்து அரேபியா, பாரசீக, கிரேக்க, உரோம வணிகர்களால் கொண்டு செல்லப்பட்டதாகும். எலுமிச்சம் பழம் சுமார் 400 ஆண்டு காலத்திற்குமுன்புதான் இங்கிலாந்திற்குப் போய்ச் சேர்ந்தது. அதனை முதன் முதலில் அமெரிக்காவிற்குக் கொண்டு போய்ச் சேர்ந்தவர் கிரிச்டோபர் கொலம்பச் ஆவார்.

எலுமிச்சத் தோல் மிக்க ஆற்றலுள்ள எண்ணெய்யைக் கொண்டிருக்கிறது. ஐம்பது அல்லது அறுபது காலன் தண்ணீரில் அதன் ஒருசில துளிகளை விட்டாலும் மிக்க மணம் வீசுவதாக இருக்கும். பலவகை நறுமண தைலங்கள் செய்வதற்கு எலுமிச்ச எண்ணெயின் சாரம் பயன்படுத்தப்படுகிறது.

எலுமிச்சம்பழம், அதன் சாறு, அதன் தோல் ஆகியவற்றைப் பன்னெடுங் காலமாக காய்ச்சல், தொண்டைப் புண், வயிற்றுவலி வாதம், எரிச்சல் போன்ற நோய்களைப் போக்குவதற்கான மருந்துகளாக வீட்டு மருத்துவ முறையில் கையாளப்பட்டு வந்திருப்பதைப் பார்த்தும், ஏன் அண்மைக்காலம் வரையில் டாக்டர்கள் அவற்றைப் பயன்படுத்த முனையாமலே வாழ்ந்துவந்தனர் என்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது. எலுமிச்சம்பழத்தின் அருமை பெருமைகளை இப்பொழுதுதான் மருத்துவத்துறை அறிஞர்கள் அறிந்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்துள்ளனர்.

எலுமிச்சம்பழம் பற்றிய இன்றைய அறிவியல் ஆராய்ச்சி சென்ற உலகப்பெரும்போரிலிருந்துதான் துவங்கப்பெற்றது என்னலாம். குருதிக் காயத்தை உடனே ஆறவைப்பதற்கும், குருதி வழிந்துகொட்டாமல் தடுப்பதற்கும், குருதியை உடனே உறையவைப்பதற்கும் எலுமிச்சம்பழத்திலுள்ள சதைப்பற்றைச் செர்மானிய போர்வீரர்கள் சென்ற உலகப் பெரும்போரின்போது கையாண்டார்கள். அந்த உண்மையை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்க டாக்டர்கள் ஆராய்ச்சி நடத்திய போது, எலுமிச்சம்பழச் சதைப்பற்றிலிருந்து எடுக்கப்படும் ஒருவகை நீர்ப்பசையை குருதிக்கு ஈடாக உடலுக்குள் செலுத்தலாம் என்பதைக் கண்டறிந்தார்கள். எலுமிச்சம் பழத்திலிருந்து தயாரிக்கப்படும் சில மருந்துகள் சீதபேதி, வயிற்றுக்கடுப்பு போன்ற நோய்களைத் தடுப்பனவாக இருந்துவருகின்றன.

எலுமிச்சம் பழத்திலிருந்து எடுக்கப்படும் சைட்ரிக் தைலம் பல்வேறு இன்னீர் வகைகளும், உணவு வகைகளும் தயாரிக்க உதவியாக இருக்கிறது. எலுமிச்சையிலிருந்து எடுக்கப்படும் ஒருவகை மெழுகு, எண்ணெய்க் கொட்டிகளில் தண்ணீர் புகாதவாறு தடுப்பதற்கு உதவிசெய்கிறது. எலுமிச்சையின் ஒருவகைச் சாரம் எஃகைக் கடினமாக்குவதற்குக் கையாளப்படுகிறது. இப்படியாகப் பல பல.

நமக்கு எளிதாக, விலை குறைவாக, ஏராளமாகக் கிடைக்கக்கூடிய எலுமிச்சம்பழம் நூற்றுக்கணக்கான நன்மைகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பது வியப்புக்குரியதுதானே!

திருந்திய மணம்

[மே. சிதம்பரனார்]

திருந்திய மணம் என்பதால் திருமணத்தில் என்ன திருத்தம் காண்கிறோம்?

1. விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை என்றிருந்தது, திருமண அழைப்பிதழ் என்றாகி, திருக்குறள் வரை சென்று, வாழ்க்கைத் துணைநலவிழா எனத் திருந்தி, வாழ்க்கை ஒப்பந்தம் என்ற தலைப்புடன் அழைப்பிதழ்கள் காண்கிறோம்.

2. அவைக்கண் குழுமிய ஆன்றோர்களின் சான்றுகள் போதுமாதலின் நிறைவிளக்கு முதலிய அஃறிணைச்சான்றுகள் அகற்றப்படுகின்றன.

3. ஆல், அரசு முதலிய குச்சிகளைப் போட்டுப் புகைத்து மணப்பந்தலில் மக்கள் கண்களைக் கசக்குவது அகற்றப்படுகிறது.

4. தமிழனுக்குத் தனிமொழி உண்டு, கலை உண்டு, நாடுண்டு. ஆதலின் அந்நிய மொழியில் அருத்தமின்றிக் கூச்சலிடுவதும் அதற்குக் காரணமானவர்களும், விடைகொடுத்தனுப்பப்படுகின்றனர்.

5. சுருங்கக்கூறின் பகுத்தறிவுக்கொவ்வாத விவரந்தெரியாத சடங்குகளனைத்தும் நீக்கி, தலைவன்-தலைவி ஆகிய இருவரும் மாலைமாற்றிக்கொள்வதோடு மட்டும் மணம் நிறைவெய்துகிறது. இவைகள்தாம் திருந்தல் இலக்கணம்.

மணம் என்பது மலரினின்றும் உண்டாவது. பிரிக்கமுடியாதல்லவா? அதுபோல், பிரியாநிலை பெறுவதால் மணம் என உவமையாகுபெயராயிற்று என்பாருமுண்டு.

சில ஆண்டுகளுக்கு முன்னர், மதுரைத் தமிழ்ச்சங்க ஆராய்ச்சியினர், மனதிற்கே மலர் எனப் பெயருண்டு, அது, அரும்பாகிப்போதாகி உரிய பருவத்தில் மலர்கிறது, அதினின்றும் கிளம்புவது காதல்மணமாகிறது என முடிவுகட்டினர்.

மண் + து = மண்டு - நெருங்கு; மண்டி = நெருங்கி; மண்டலம் = நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு வட்டம், என வருவனபோன்று, மண் + அம் = மண்ணம்; நெருக்கம்; நெருங்கியிருத்தல் என்ற பொருளுடன், வண்ணம் - வணம் என்றாகியதுபோல், மணம் என்றாகியது, மணவாழ்க்கை—நெருங்கிய வாழ்க்கை, அல்லது பிரிவுபடாத ஒன்றுபட்ட வாழ்க்கை என்றும் பொருளாகக் கொள்ளலாம்.

உதாரணமாகத் திருமகள் மணந்தமார்பன், என்றால்—திருமகளை நெஞ்சகத்தில் நீங்கா நிலையாக ஒன்றுபடுத்தியவன், என்ற பொருளில் வருவதும் காணலாம்.

"கன்னிகாதானம்" "தாரா முகூர்த்தம்" என்றெல்லாம் கூறப்படுகின்றன. பெண்மகள் தானம்கொடுக்கும்பொருளா? அல்லது தாரை வார்க்கும் ஒரு பொருளா? இக்கொள்கை தமிழனுக்கில்லை. தமிழன் இலக்கியத்தும் இல்லை. அறிந்தோ அறியாமலோ இத்தொடர் மொழிகள் வருமாயின் மானக்கேடாகாதா?

பொருத்தம் பார்ப்பதும் தமிழனுக்குண்டுதான். என்ன பொருத்தம்? ஒத்த வயது ஒத்த கல்வி, ஒத்த அழகு, ஒத்த உருவம், ஒத்த பண்பு முதலியன என்று அகப்பொருள் இலக்கணம் கூறுகிறது.

இத்தகைய பொருத்தங்கள் பார்க்குமாறுதான் நம் இலக்கணம் கூறுகிறது.

மணமக்களைக் கண்டறியாத ஏதோ ஒருவனிடம் சென்று பெயர்களைச் சொல்லிப் பொருத்தம் கேட்பதும், அவன் பஞ்சாங்கக் குப்பைகளைப் புரட்டிக்கொண்டு, காலுக்கும் கழுத்துக்கும் கயிறு, கோழிக்கும் வல்லூறுக்கும் பகை, ஆலுக்கும் வேலுக்கும் பொருந்தாது, அரக்கருக்கும் தேவருக்கும் பகை என்கிறானே? இது யாருக்குத் தெரியாது. இவைகட்கும் மணமக்கட்கும் என்ன சம்பந்தம்? இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இந்த முட்டாள்தனம் நிகழலாமா?

மேலும் பொருத்தங்கள் பார்த்துக்கொள்வதும் தேர்ந்தெடுத்தலும் மணமக்களின் உரிமையன்றோ? பிறர் ஏன் தலையிடவேண்டும்? உரிமையை அவர்கட்கு விடுத்துப் பெற்றோர்களும், மற்றோர்களும் ஒத்தாசை செய்யவேண்டும்; புத்திமதி கூறவேண்டும். இதுவன்றோ கடமை!

அன்று, பொருப்போ, பொழிலோ, நீரோடையோ, மணமக்களின் தேர்தலிடமாக விளங்கின என்று அகப்பொருளிலக்கணம் கூறுகின்றது. இன்று ஆங்கிலேயர்கூட கோயிலோ, கோலாட்டமோ தேர்தலிடமாக வைத்திருப்பது வழக்கின் சார்பாக வந்ததல்லவா ?

தலைவனும் தலைவியும் தமக்குள் தேர்தலே காதல் மணமாகும். பின்பு தேர்தல் தமக்குள்ளிருக்கும்வரை களவு மணமாகவும், பிறகு தாய்தந்தையர்க்கு அறிவித்து ஆவன செய்து கொள்வது கற்பு மணமாகவும் பெயர்பெறும்.

இத்தகைய காதல் மணத்திற்கு—காதலர்களின் உரிமை மணத்திற்குச் சாதியோ, சமயமோ, உறவுமுறையோ குறுக்கே நின்றதில்லை. காதல் மணம் முற்றுற்ற பின்னர், தலைவி தலைவனைப் பார்த்துக் கூறுவது,

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழியறிதும்
செம்புலப் பெயல்நீர் போல—
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே"

(குறுந்தொகை)

"எனது தாயும் உனது தாயும் யாராயிருப்பார்களோ? எனது தந்தையும் உனது தந்தையும் எந்தமுறை கொண்ட சுற்றத்தினரோ? யானும் நீயும் எந்தவழியாலறிவோம்? ஆனால், செங்நிலத்திற்பெய்த மழைநீர்போல் நமது அன்பு நிறைகாதல் உள்ளங்கள் ஒன்றுகலந்தன" என்பதாகும்.

தேர்தல் உரிமையும் பெண்மக்கட்கா? என ஐயப்பாடுகொள்வாரும் உண்டு. ஒரு சிறு அணிகள் அவர்கட்குப் பிடிக்கவில்லையானல் மாற்றிவருகிறோம். ஒரு சேலை பிடிக்கவில்லையானல் பல சேலைகளைக் கொண்டுவந்து முன் வைக்கிறோம். எதற்காக? அவர்கள் விருப்பப்படி நடக்க! அதுபோல, பலகாலம் கூடி வாழ்க்கை நடத்துவது அவர்கள்தானே? அவர்களின் மன ஒப்புதல் கேளாமலிருப்பது நியாயமாகுமா ?

இருவர் மனமும் ஒன்றுபட வாழ்வதன்றோ வாழ்க்கை. அவ்வாழ்க்கையின் விளைவன்றோ, அன்பும், இன்பமும். அவ்வழித்தோன்றலே அறநெறியாகும். வாழ்க்கையிலக்கணம் கூறுவதைப் பாருங்கள்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அன்பும் அறநெறியும் பொருந்திப் பண்பாடும் பயனும் பெறுதவாழ்க்கை வாழ்க்கையாகுமா? என்பதையே குறிப்பிடுகிருர் வள்ளுவனர்.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று.

அறநெறியென்று சொல்லப்படுவது இல்வாழ்க்கையே ஆகும். அதனை விடுத்து அறநெறிகாண வேறு வழி இல்லை என்பதுதான் ஆசிரியர் கருத்து. அதுவும் பிறர் பழிச்சொல்லுக்கு இலக்காகாது இருவரும் மிகமிகக் கவனித்து வாழ்க்கைப்படகைச் செலுத்த வேண்டும். அதுதான் நன்று என்ருர்.

புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

புகழ்சேர்ந்த இல்லறம் நடத்தாதவர்கட்குத் தம்மை இகழ்ந்து பேசுவார்முன் ஏறுபோல் கம்பீரநடைபோட இயலாது என்பது மேற்கூறிய குறட்சான்ருக அமைவதாகும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

தெய்வம் தொழாள் என்பதில், தெய்வம் மேலானது. தெய்வப்புலமை - உயர்ந்த அறிவு எனப் பொருள்படலால், வணக்கம் - மரியாதை செலுத்துவதெனருல், தமது தலைவனைவிடப் பிறிதோருயர்ந்த பொருளில்லை அங்ஙனமிருப்பதாகக் கொள்வதும் கூடாது, என்பதை இவ்வாறு கூறினர் எனக் கொள்ள வேண்டும்.

பெய்யெனப் பெய்யுமழை—என்பது பெய் என வேண்டி நிற்கும் பருவத்தில் பெய்யும் மழைபோல் என்று உவமையணியாகப் பொருளுரைப்பர்.

ஆதலின், தமிழனது அடிப்படையான பண்பாட்டுகளை நமது கொள்கையாக—கடமையாக, உயிர்ப்பாகக்கொண்டு சீர்திருத்தத்திருமணங்களையும் சாதிசமயச் சார்பற்றக் கலப்புமணங்களையும் பெருக்கிச் சமுதாயத்தை விரிவும் பலமும் பெறச்செய்வதே, தமிழனகப்பிறந்த ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

காணிக்கை!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

துரோ : ஏகலைவா! யோசிக்காதே! இப்பொழுதுகூடக் 'கொடுக்கமுடியாது' என்று சொல்லிவிடு, நான் போய்விடுகிறேன்!

ஏக : இல்லை குருநாதா! கட்டை விரலைக் காணிக்கையாக்குவதில், நான் தயங்கவில்லை. அவன் சொல்வதை நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்!

வன : துரோணரே! ஒன்றைமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்! ஏகலைவனின் கட்டை விரல் அறுந்துவிழுமுன், உமது சிரம் அறுந்து மண்ணில் விழுந்துவிடும்!

ஏக : என்ன சொல்லுகிறாய்?

வன : ஆமாம்! கட்டை விரலை நீ அவருக்குக் காணிக்கையாக்குகிறாய்! அதற்குப் பதில், அவருடைய சிரசை உனக்குக் காணிக்கையாக்குவதென தீர்மானித்துவிட்டேன்!

துரோ : கொலைக்குத் துணிந்துவிட்டாயோ, பாதகா!

வன : சிரத்தை அறுப்பது கொலை, பாதகம்! ஆனால் ஒரு வில்வீரனின் கட்டைவிரலை வாங்குவது மிகப் புண்ணியமான செயலோ? இவனுடைய கட்டைவிரலை அறுப்பதற்குப் பதில் இவன் தலையை அறுத்துக் கொலை செய்துவிடலாமே! கொலையினும் கொடுமையான காரியத்தையல்லவா நீர் செய்கிறீர்! கொலை உயிரைப் போக்கும், நீர் செய்யும் காரியம், அவன் உயிரைவைத்து, வாழ்நாள் பூராவும் சித்ரவதை செய்யும்! அழகு ஓவியங்களைத் தீட்டுபவனின் கண்ணைத் தோண்டிவிட்டால், சிறந்த சிலைகளை வடிப்பவனின் கரத்தை வெட்டிவிட்டால், இனிய காவியம் பயில்பவனின் நாவை அறுத்துவிட்டால், அதற்குப் பின் அவர்களின் வாழ்வில் வேறு எதை மிகுதிவைக்கமுடியும்! புல்லேந்தும் வீரரே! புண்ணிய தீர்த்தமாடும் தீரரே! வில்லைப்பற்றி உங்களுக்குத் தெரிந்ததைவிட எங்களுக்குப் பரம்பரை பரம்பரையாக அதிகம் தெரியும்? கட்டைவிரலைக் காணிக்கை என்று கேட்கிறீரே, அதன் உட்கருத்து, சூதுத் தன்மை தெரியாதென்று நினைக்கிறீர்? வில்லேந்தும் வீரனின் கட்டைவிரலை எடுத்துவிட்டால், அவனுடைய வீரம் அழியும், வேடர்குலத்தில் ஒரு வில் வீரன் இருக்கிறான் என்ற பெயர் அழிந்துவிடும்! வஞ்சகனே! வாழ்வில் நஞ்சைக் கலந்திடும் நரிக்கூட்டத் தலைவனே! இவன் கட்டைவிரலை நீ அறுபடச் செய்தால், உனது சிரத்தை அறுத்துக், குடுமியால் அந்தக் கொம்பில் கட்டித்தொங்கவிட்டு விடுவேன்!

துரோ : என்ன சொன்னாய், உலுத்தனே? யாரென்று தெரியாமல் பேசுகிறாய்? என் கோபத்தைக் கிளராதே, பின் ஆபத்தை அணைத்துக்கொள்வாய்!

வன : யாரென்று தெரியாமல் பேசவில்லை! அதிகமாகத் தெரிந்துகொண்டதால் தான் பேசுகிறேன்! துரோணாச்சாரியார், பிராமணோத்தமர், வேத சாஸ்திரங்களைப் படித்தவர், அஸ்தினாபுரத்து இளவரசர்களுக்கு ஆசிரியர்! அதுமட்டுமல்ல, வில் வித்தையில் ஒரு சூத்திரரில் எவனாவது மேம்பட்டு வருவதாக இருந்தால் அவனை அழிக்க முன்வரும் உத்தமர்! வேத சாஸ்திரங்களைப் படித்து பின் வேடுவர் குலத்தொழிலில் ஈடுபடுபவர்! இளவரசர்களுக்கு ஆசிரியர், அத்துடன், பொறாமை, வஞ்சகம், சுயநலம், கல்நெஞ்சம் இவைகளுக்கும் ஆசிரியர்! அப்படி உறுத்துப் பார்க்காதீர்! இதைவிட அதிகமான உருட்டல் மிரட்டல்களை நான் பார்த்திருக்கிறேன்! நீர் வில்வித்தையில் வல்லவர், நான் மல்யுத்தம் பயின்றவன்! போராட்டமென்றால் தூர நின்று வில்லை வளைத்து, அம்பை நான் எய்வதில்லை! என் கரத்தை மடக்கினால்,

அதுவே நாண் ஏறிய வில்! விடுகிற ஒவ்வொரு குத்தும் ஒவ்வொரு அம்பு! சீறி வரும் சிங்கம் என்னுடன் கட்டிப்புரண்டு, தோல்வி கண்டிருக்கிறது! என் கைப்பிடியின் வலி தாங்காமல், காட்டானைகள் கதறிக்கொண்டு ஓடியிருக்கின்றன! பாய்ந்துவரும் புலியை என் கரத்தில் தாங்கி, அதன் விரிந்த வாயை மூடமுடியாமல் பிளந்திருக்கிறேன்! வேண்டுமானால், வேதியர் குலத்தவரே! உமது கையைக் கொடுத்துப் பாரும், ஐந்து விரல்களையும் ஒன்றாக்கிக்காட்டுகிறேன்!

துரோ : ஏ, வேடா! ஏதேதோ பேசுகிறாய்? ஏகலைவன் தானாக வந்து காணிக்கை தருகிறேன் என்றதால் கேட்டேன். இல்லையென்றால் போகிறேன்!

ஏக : ஸ்வாமி! சற்றுப் பொறுங்கள்! நான் காணிக்கை தருகிறேன்! (உடைவாளைக் கையில் எடுக்கிறான்.)

வன : ஸ்வாமி! சற்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! காணிக்கை வைக்கப்படும்பொழுது, தலையிழந்த முண்டம்தான் அங்கு நிற்கும்!

ஏக : வனதத்தா! பேசாமலிருக்கமாட்டாய்?

வன : நான் பேசாமலிருக்கிறேன்! ஸ்வாமி! இனி என்னுடைய கரம் பேசும்!

துரோ : இனி என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது! குருவைப் பழிப்பவனை வைத்துக்கொண்டு என்னை அவமானப்படுத்துகிறாய்? நான் போகிறேன்!

வன : நயவஞ்சகனே! நஞ்சினும் கொடியவனே! குள்ளநரிக் கூட்டத்தின் கோமானே! நன்றாகப் போ! உன் நாட்டுக்கு. இந்தக் காட்டுக்கு அதனால் நன்மை உண்டாகும்!

ஏக : பேசாமலிருக்கமாட்டாய்? (வனதத்தன் கன்னத்தில் அறைகிறான்.)

வன : ஆ! (திகைத்து நிற்கிறான்,)

ஏக : இப்படி அமருங்கள், இதோ! தாங்கள் விரும்பிய காணிக்கை!

(இடது கையால் வலது கைக்கட்டை விரலை அறுக்கிறான்.)

“ஐயோ! ஐயோ!” என்று வேதனை தாளாமல் வனதத்தன் துடிக்கிறான்.

ஏகலைவன் தான் அறுத்த கட்டைவிரலை துரோணரின் கையில் போட்டுவிடுகிறான்!

“ஆ!” என்று துரோணர் துள்ளி எழுகிறார்,

“ஆகா!” என்று வெற்றிச் சிரிப்புடன் அருச்சுனன் வருகிறான்.

கையிலிருக்கும் இரத்தத்தைப் பார்த்ததும், துரோணர் மயங்கி விழப்போகிறார்- அருச்சுனன் அவரைத் தாங்கிக்கொண்டு, அழைத்துச் செல்லுகிறான்.

வேதனை மிகுதியால், நெற்றியில் கைவைத்த வண்ணம் வனதத்தன் நிற்கிறான். இடதுகையில் ஒரு கட்டைச் சுற்றிக்கொண்டு, ஏகலைவன் முன்வருகிறான்.)

ஏக : (வனதத்தன் பின்புறமாக வந்து தோளைப் பற்றி) வா, வனதத்தா போகலாம்!

(தோளைப் பற்றிய கையைத் தள்ளிவிட்டு, வனதத்தன் வேறுபக்கம் திரும்பி நிற்கிறான்)

ஏக : (புன்முறுவலுடன்) திரும்பிப் பார்க்க மாட்டாயோ, ஆருயிர் நண்பா!

வன : (கோபத்துடன், கன்னத்தைத் தடவிக்கொண்டு) நண்பன்! நானா? நான் யாரோ! நீ யாரோ?”

ஏக : கட்டை விரலைக் காணிக்கையாக்கியதற்காக என்மீது கோபமா?

வன ; இல்லை, மட்டற்ற மகிழ்ச்சி! போ! போய், உன் கட்டைவிரலை என்ன, கரத்தையே வேண்டுமானாலும் அறுத்துக் காணிக்கையாக்கிவிட்டுவா! எனக்கென்னவாம்? உனக்குதான், அபூர்வமான குரு, அன்பும் அருளும் ததும்பிடும், ஆச்சார்ய சீலர் கிடைத்துவிட்டாரே! அவர் முன் போய் நின்று, கூழைக்கும்பிடு போட்டு, “குருதேவா! குருதேவா!” என்று பூஜைசெய்து கூத்தாடிக்கொண்டிரு! கேட்ட காணிக்கையைக் கொடுத்து, கெட்டலைந்துபோ! அவர்தான் உனக்கு ஸ்வாமி! குருதேவர்! நான் யாரோ, வேடன், சூத்திரன், போக்கிரி, உலுத்தன், கன்னத்தில் அறைந்து, காலால் உதைக்கப்படவேண்டியவன்!

ஏக : மன்னித்துவிடு, உன்னைக் கன்னத்தில் அறையுமுன், என் இருதயத்தை அறைந்துவிட்டுத்தான் அப்படிச் செய்தேன்! என்னை மன்னித்துவிடு! வா, போகலாம்!

வன : நீ போகலாம்! நான் இப்படியே போகிறேன்! உனது பாதையும், எனது பாதையும் இனிச் சந்திக்காது! தப்பித்தவறி என்னை நீ பார்த்தால் ஏதோ காட்டு மிருகம் போகிறது என்று போய்விடு! நானும் யாரோ துரோணருடைய அருமந்த சீடகோடிகளில் ஒருவர் போகிறார் என்று போய்விடுகிறேன்! (போகிறான்.)

ஏக : இன்று என் வலதுகை கட்டைவிரலை மட்டுமல்ல, என் வலதுகரம்போன்றிருந்த நண்பனையும் இழந்துவிட்டேன்! துரோணர் என் கட்டைவிரலை அறுத்துவிட்டுச் சென்றார்! நீ என் இருதயத்தை அறுத்துவிட்டுச் செல்கிறாய்! சரி, அதையும் தாங்கிக்கொள்கிறேன்!

(வேதனை தாளாமல், வனதத்தன் திரும்பிவந்து ஏகலைவன்மீதுவிழுந்து புலம்புகிறான்)

வன : என்ன காரியமடா செய்தாய்? உன்னுடைய கட்டை விரலை அறுத்துத் தருவதற்குப் பதில், என் இதயத்தை அறுத்துத் தரச்சொல்லியிருந்தாலும் தட்டாமல் அதை நிறைவேற்றியிருப்பேன்! நீ கட்டைவிரலை இழந்தாய், வேடர்குலம் இணையற்ற வில் வீரனை இழந்துவிட்டது! வில் வித்தையில் எங்கள் ஏகலைவன் மாவீரன், தன்னிகரற்ற தீரன் என்று இறுமாப்புடன் வேடுவர்கள் பேசிப் பெருமைப்பட்டது இன்றுடன் அழிந்துவிட்டது! எவ்வளவு கனவுகள் கண்டோம், எவ்வளவு வெற்றிகளை எதிர்பார்த்து மகிழ்ந்தோம்! பரதகண்டத்து பல்வேறு நாட்டு அரசகுமாரர்களும் கூடிய அவையில், யாரோ முன்பின்னறியாத காட்டுவாசி, ஹிரண்யதனுசின் குமாரன், மற்றெல்லோரையும்விட வில்வித்தையில் சிறந்து விளங்கினான், அவனுக்கு ஈடாக எவரையும் கருதமுடியவில்லை என்ற வெற்றிச் செய்தியைக் கேட்கக் காத்திருந்தோம்! ஆனால், இன்று உன் கட்டைவிரல் துண்டிக்கப்பட்டுவிட்டது; எங்களது ஆசை நினைவுகள் தூளாக்கப்பட்டுவிட்டன! உனது தந்தை ஹிரண்யதனுசுக்குத் தெரிந்தால், இரத்தக்கண்ணீர் வடிப்பார், துண்டிக்கப்பட்ட அந்தக் கட்டைவிரலைப் பார்த்தால் காட்டு மறவர்கள் கதறியழுவார்கள்! என்னைக் கண்டால், 'எப்படி இந்தக் கொடுஞ்செயலை அனுமதித்தாய்?' என்று ஏசிப் பேசுவார்கள்.

ஏக : காணிக்கை கொடுப்பதாகக் கூறிவிட்டு, பின் கொடுத்த வாக்கை நிறைவேற்றாமற் போகலாமா?

வன : காணிக்கை கேட்பதற்கே அவருக்கு உரிமை கிடையாது! அவர் உனக்கு என்ன கற்றுக்கொடுத்தார் இப்பொழுது காணிக்கை கேட்பதற்கு? அவரை நாடிப் போனபொழுது விரட்டியடித்தார், இப்பொழுது வந்தார் குருவென்ற உரிமை கொண்டாட! அவரைச் சிலைசெய்து வைத்து நீ விற்பயிற்சி ஆரம்பித்தபொழுதே நான் சொன்னேன், வேண்டாம் இந்த விபரீதம்! என்று. உனது விடா முயற்சியால் நீ கற்றுக்கொண்டாலும், வில்வித்தையில் அபாரப் பயிற்சி பெற்றாலும், கடைசியில் உலகத்தவர்கள் —என்ன இருந்தாலும் ஏகலைவன் வேடர் குலத்தவன், சூத்திரன்; துரோணர் போன்ற ஆச்சாரிய சீலரைக் குருவாக நினைத்ததால்தான் வித்தை கற்க முடிந்தது என்றெல்லாம் பேசிடுவார்கள். வில்லில் உனது வீரம் உயர்ந்தது, இன்று அதை ஒரு வீணனுக்குப் பலியாக்கிவிட்டாய்! குருதேவா என்று வஞ்சகனை வாழ்த்தினாய், அவன் கொடு உன் கட்டைவிரலை என்று வாங்கிப் போனான்! ஆச்சாரிய சீலரே என்று அவனை அர்ச்சித்தாய், அவன் நீ கற்ற வில்வித்தையை அழித்துவிட்டுப் போய்விட்டான்! உனது வீரத்தைப் போக்கிட அவன் சூழ்ச்சிசெய்தான் அதில் நீ ஏமாந்தாய்!

ஏக ; நான் ஏமாந்தேன் என்று சொல்கிறாய்! அவ்வளவுதானே!

வன : நான் மட்டுமென்ன? உலகமே கூறிச் சிரித்துக்கொண்டிருக்கும். வேடனும் ஒருவன் வில்லைத்தூக்க, புல்லைத் தூக்கும் வேதியர் குலத்தவரைக் குருவாக வைத்துக்கொண்டான், அதிலும் நேரிலே அல்ல, சிலையாக அமைத்து! பின் அந்த வேதியர் நேரில்வந்து காணிக்கை தா என்றார். கட்டைவிரலைத் தந்தான் பின் காலமுழுவதும் வில்லைத் தொடமுடியாமல் ஏமாந்தான் என்றெல்லாம் சொல்லித் துரோணரின் புத்தி சாதுர்யத்தையும், உன்னுடைய ஏமாளித்தனத்தையும் காட்டிப் பேசுவார்கள். வில்வித்தைக்குக் கட்டைவிரல்தானே முக்கியம். அதையும் மறந்து அவன் கொடுத்துவிட்டான் என்று உன் முட்டாள்தனத்தைப்பற்றிக் கதை சொல்வார்கள்!

ஏக : ஏகலைவன் ஒரு ஏமாளி!

வன : ஏமாளித்தனத்திலும் கடைந்தெடுத்த ஏமாளி!

ஏக : முட்டாள்!

வன : முழு முட்டாள்! அவை மட்டுமல்ல வேடன் சூத்திரன் காட்டுமிராண்டி, வில் வித்தை கற்றானேயொழிய கட்டைவிரலின் முக்கியத்தை உணராமல் காணிக்கையாக்கியவன், கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கியவன்போல! விவேகமற்றவன்! மதியிலி!

ஏக : நண்பா! நான் கட்டைவிரலை அறுத்திடும்பொழுது இந்தப் பட்டப் பெயர்களை எல்லாம் எதிர்பார்க்கவில்லையென்று நினைக்கிறாய்! நீ துரோணருடன் கடுங்கோபத்துடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, என் உள்ளத்தில் கடும் கொந்தளிப்பு இல்லாமலிருந்திருக்குமா? என் கதையைப் பொழுதுபோக்காகப் படிப்பவர்கள் 'ஏகலைவன் ஒரு ஏமாளி!' என்றுதான் பேசிக்கொள்வார்கள். கொஞ்சம் பச்சாதாபம் கொள்பவர்கள் 'ஏகலைவனின் குருபக்தியைச் சோதிக்க துரோணர் கட்டைவிரலைக் கேட்டார், குருபக்தியை மெய்ப்பிக்க ஏகலைவனும் கட்டைவிரலைத் தந்தான்!' என்று துரோணர் பேரிலும் என்பேரிலும் பழி போடாமல் சொல்வார்கள்! அப்படியே என் கதை போய்க்கொண்டிருக்காது, என்றைக்காவது ஒருநாள் கதை கேட்டிடும் கூட்டத்தில் ஒரு அறிஞன் எழுந்து நின்று 'ஏகலைவன் ஒரு ஏமாளியல்ல! உண்மையில் துரோணாச்சாரியாரை ஏகலைவன் தோற்கடித்தான்! ஏகலைவன் இழந்தது கட்டைவிரல், துரோணர் இழந்தது கண்ணியம்! கவனமிருக்கட்டும்!' என்று முழங்கிடுவான்! நான் அந்தக்காலம் வரைக் காத்திருப்பேன், நல்ல தீர்ப்பைப் பெற!

வன : ஆ! என்ன நண்பா!

ஏக : பார்த்தாயா? புலம்பிக்கொண்டிருந்த நீயே, புன்னகையுடன் கேட்கிறாய்! அதைப்போலத்தான் மக்களும் எனது கதையில் புதுமைகண்டு புன்னகை புரிவார்கள்! கட்டை விரலை அறுக்கும் பொழுது நான் ஏமாளி என்றுதான் எவரும் நினைப்பார்கள்! கட்டைவிரலைக் காணிக்கையாகத் தா என்று துரோணர் கேட்டபொழுதே அவருடைய கொடுமை எண்ணம் எனக்குப் புரிந்துவிட்டது. எனது கட்டைவிரல் போனாலும் பாதகமில்லை, இவருடைய கொடுமை உலகுக்கு என்றென்றும் தெரியட்டும் என்றுதான் கட்டை விரலை அறுத்துத் தந்தேன். ஏமாளியாவதற்கும் சில சமயங்களில் விவேகம் வேண்டும்!

வன : உண்மை தெரியாமல் உளறினேன். இருந்தாலும் சங்கடமான நிலை! கட்டைவிரலை இழந்தபின், வில்லை எடுக்கமுடியாது, வில்வீரத்தை இழந்துவிட்டாய். அதற்குத்தான் நான் வருத்தப்படுகிறேன்.

ஏக : நண்பா! கட்டைவிரலை வாங்கிவிடுவதால், எனது வீரத்தை அழித்துவிடுவதாக அவர் நினைத்தார். ஆனால் அவர் எனது கட்டைவிரலைக் கேட்டபொழுதுதான் எனது வில்வீரம் உயர்ந்து நின்றது என்று நான் நினைக்கிறேன்! புரியவில்லையா, வனதத்தா? வில்வித்தையில் சிறந்தவன் அருச்சுனன். அவன் கண்டு திகைக்குமளவுக்கு எனது வில்வீரம் இருந்திருக்கிறது! வில்வித்தைக்கு ஆசிரியர் துரோணர், அவர் கண்டு மருளுமளவுக்கு எனது வில்வித்தை உயர்ந்ததாயிருந்திருக்கிறது! எனது கட்டைவிரலை வாங்கினால்தான் என் வீரத்தை அழிக்கமுடியும் என்ற எண்ணம் அவர்களுக்குப் பிறந்ததென்றால், அதற்கு என்ன அர்த்தம்? காட்டானையைப் பிடிக்க மடுவை வெட்டுகிறார்கள் என்றால், அந்த யானையை எதிர் நின்று பிடித்து அடக்கக் கூடிய ஆற்றல் அவர்களுக்குக் கிடையாது என்பதால். அதைப்போல கட்டைவிரலை அறுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் பிறந்ததே, வில்வித்தையில் என்னை எதிர்த்து நின்று வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லாததால்! இதைவிட என் வில்வீரத்துக்கு உயர்ந்த அத்தாட்சி வேறு என்ன வேண்டும்? வில்விஜயனும் வில்லாசிரியர் துரோணரும் சேர்ந்து என் வில்வித்தையை அழிக்கச் சூழ்ச்சி செய்தார்களென்றால், அவர்களுடைய வில் பயிற்சியைவிட, வில்லாற்றலைவிட என்னுடைய வில்வீரம் உயர்ந்திருந்தது என்றுதானே அர்த்தம்! கட்டைவிரல் இருந்தபொழுது 'வில்வீரன்' என்று எவ்வளவு புகழ் அடைந்தேனே, அதைவிட அதிகமான அளவு கட்டைவிரலை இழந்ததால் நான் அடைந்தேன்! (தொடரும்)

விளைவும் விளக்கமும்

திருக்குளத்திலே இருக்கும் படியும், திருக்கோயிலிலே இருக்கும் சிலையும் ஒரேவிதக் கற்கள்தாம் என்றால், பெற்றெடுத்த தாயும் மணந்துகொண்ட மனைவியும் ஒரே தன்மையினர்தாமா?

இப்படிப்பட்டக் கேள்வியை எழுப்புவதன் மூலம், சில வைதீக உள்ளம் படைத்தோர், சிலை வணக்கக் கொள்கையை நிலைநாட்டிவிட்டதாக மனப்பால் குடித்து மனக்களிப்பு கொள்கிறார்கள்; நாமோ அத்தகையோரின் அறியாமையைக்கண்டு எள்ளி நகையாடவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொருத்தமற்ற ஒரு கொள்கைக்குப் பொருந்தாத உவமை ஒன்றின்மூலம் உயிர்ப்பு கொடுக்க எண்ணுகிறார்கள் வைதீக அன்பர்களிலே சிலர். அவர்தம் நிலைகண்டு நாம் இரங்கத்தான் வேண்டியிருக்கிறது.

படிக்கட்டிலே போடப்படும் கல் உணர்ச்சியற்ற ஒன்று என்றும், ஆனால் கோயிலிலே வடித்துவைக்கப்படும் சிலையோ கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனறிவோடு, எதையும் ஆராய்ந்தறியும் உள்ளத்தையும் பெற்றிருக்கிறது என்றும் வைதீகர்கள் கூறுகிறார்கள். பகுத்தறிவுவாதிகளோ படிக்கட்டிலே போடப்படும் கல் எப்படி உணர்ச்சியற்ற ஒன்றோ அப்படியேதான் சிலையாக வடித்துவைக்கப்பட்டிருக்கும் கல்லும் உணர்ச்சியற்ற ஒன்று என்று கூறுகின்றனர். தோற்றத்தில்—உருவப்பொலிவில் இரண்டும் வேறுபட்டு விளங்கலாமே யொழிய தன்மையில் இரண்டும் கல்லுக்குரிய தன்மை கொண்டவைதாம் என்பது பகுத்தறிவுவாதிகளின் கூற்று.

பகுத்தறிவுவாதிகளின் கூற்றை மறுக்க விரும்பும் வைதீகர்கள், கோயிலிலே நிலைநாட்டப்படும் கடவுட்சிலை எப்படியெல்லாம் ஆறு அறிவுபடைத்ததாக விளங்குகிறது என்பதைக் காரணகாரிய விளக்கங்களால் விளக்கிக் காட்டிப், படிக்கட்டிலே கிடக்கும் கல்லுக்கும் கோயிலிலே நிற்கும் கடவுட் சிலைக்கும் ஆறறிவுணர்ச்சியிலே வேறுபாடு உண்டு என்பதை நிலைநாட்ட முற்படுவார்களேயானால், அவர்தம் செயலிலே அறிவுடைமை பொதிந்து கிடப்பதாக எண்ண இடமேற்படும் படிக்கட்டிலே பெரும்போக்காகப் படுத்துக்கிடக்கும் **'கருங்கல்'** எந்தத் **'தன்மை'**யோடு படுத்துக்கிடக்கிறதோ, அதே **'தன்மை'**யில்தான் கோயிலிலே சிலையாக அடித்து நிறுத்தப்பட்டிருக்கும் **'கருங்கல்'**லும் நிற்கிறது என்பதை, எந்தக் கோயிலில் எந்தச் சிலையிடத்து வேண்டுமானாலும் விளக்கமாகக் கண்டு கொள்ளமுடியும் என்று பகுத்தறிவுவாதி கூறுகிறான். ஒரு காலத்திலே மக்களால் 'கடவுள்தன்மை'யுடையன எனக் கருதப்பட்டு, அதன் காரணமாக வணங்கப்பட்டு, காணல்—கேட்டல்—உண்ணல்— உயிர்த்தல் — உற்றல் —ஆராய்ந்தறிதல் போன்ற எல்லாவுணர்ச்சிகளையும் உடையன என்று எண்ணப்பட்டு, தூபதீப நைவேத்தியங்கள் காட்டப்பட்டுப், பேணிக் காக்கப்பட்டக் 'கடவுட்சிலைகளி'ல் பல; பிறசமயத்தாரின் போக்காலோ அல்லது பிறநாட்டின் படையெடுப்பாலோ அல்லது கண்காணிப்பற்றத் தன்மையாலோ காலொடிந்த—கையொடிந்த—காதுவிழுந்த — கண்போய — மூக்கு உடைந்த—முடியுடைந்த—தலைபோய—கைவளைபோய 'கடவுட் சிலைகளா'க மாறி, இப்பொழுது தஞ்சை அரண்மனையில், கலைக் கோயிலில், கண்காட்சிக்குரிய கற்சிலைகளாய் நிற்கின்றன! ஒரு காலத்தில், தம்மைப்பற்றி மக்கள் கருதின கருத்தெல்லாம் பொய்மைத் தன்மைபூண்டன, இப்பொழுது, தாம் நிற்கும் நிலைதான் உண்மைத்தன்மை கொண்டது என்பதை 'உணர்த்துவதுபோல' அந்தச் சிலைகள் காட்சியளிக்கின்றன! அந்தச் சிலைகளைக் கண்ணுறும் 'பக்தகோடி'களும் சரி, பிறரும் சரி மனிதனின் கைத்திற வேலையின் காரணமாக அந்தச் சிலைகள் கருங்கற் படியைக்காட்டிலும் தோற்றத்தில்—உருவத்தில் வேறுபட்டிருப்பதைக் கண்டு வியப்புறுகிறார்களே யொழிய, அந்தச் சிலைகளுக்குக் கருங்கற் படியைக் காட்டிலும் தனித்தன்மை—உணருந் தன்மை — செயலாற்றுந் தன்மை — வரங் கொடுக்குந் தன்மை உண்டு என்று எவரும்

கருதுவதில்லையே! இந்த நிலைமையைத்தானே பகுத்தறிவுவாதி சுட்டிக்காட்டுகிறான்! இப்பொழுது தஞ்சைக் கலைக்கோயிலில் காட்சிக்குரிய பொருள்களாக இருக்கும் சிலைகளுக்கும், கோயிலில் உட்கார்ந்துகொண்டு வந்தனை—வழிபாடு—தூபதீபநைவேத்தியங்களை ‘வாங்கிக்கொண்டி’ருக்கும் சிலைகளுக்கும் தன்மையில் வேறுபாடில்லை என்றுதானே பகுத்தறிவுவாதி கூறுகிறான்! இன்று தஞ்சைக் கலைக்கோயிலிலிருக்கும் சிலைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ‘கதி’, இப்பொழுது வணங்கப்படும் நிலையிலிருக்கும் சிலைகளுக்கு வருங்காலத்தில் எப்பொழுதாயினும் ஏற்படத்தானே போகிறது! ஏற்படாது என்று எவர்தான் கூறமுடியும்? காலப்போக்குதான் அதனைத் தெளிவாகக் காட்டுகிறதே!

குளத்துப் படியும் கடவுட்சிலையும் தன்மையில் ‘கருங்கற்கள்’ தாம் என்று பகுத்தறிவுவாதி கூறிடும்போது, மனைவியையும் தாயையும் கொண்டுவந்து முன்னிறுத்துகிறார்கள் வைதீகர்கள்.

மனைவிக்கும் தாய்க்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்தி, அவர்களோடு நாம் கொள்ளக்கூடிய வேறுபட்ட உறவு முறையை உணர்த்தி, அதன்மூலம் படிக்கல்லுக்குள்ள ‘ஆற்றலற்ற தன்மை’யையும், கடவுட் சிலைக்குள்ள ‘ஆற்றலுற்ற தன்மை’யையும் நிலைநாட்ட வைதீகர்கள் முற்படும்போதுதான், அவர்தம் செயல்கண்டு எள்ளி நகையாட வேண்டியிருக்கிறது.

கடவுட்சிலைக்கு வரம் வழங்குந் தன்மையும், செயலாற்றுந் தன்மையும் உண்டு என்பது வைதீகர்களின் வாதம்; அந்தத் தன்மைகள் அந்தக் கற்சிலைக்கு இல்லை என்பது பகுத்தறிவுவாதிகளின் வாதம். படியாகக் கிடக்கும் கருங்கல் எப்படி ஆற்றலற்ற ஒன்றோ அப்படியேதான், ‘கடவுளாக’ நிற்கும் கற்சிலையும் ஆற்றலற்றது என்பது பகுத்தறிவுநெறியினரின் வாதம். கருங்கற்படியைக் காட்டிலும் கடவுட்சிலை எல்லாவிதத்திலும் ஆற்றல் படைத்தது என்பதை நிலைநாட்ட, மனைவியிடத்திலும் தாயிடத்திலும் ஒருவன் கொள்ளக்கூடிய உறவு முறையை, வைதீகர்கள் உவமையாக ஆக்கிக்காட்டுவது எங்ஙனம் அறிவுக்குப் பொருந்துவதாகும்? உண்மைக்குப் புறம்பான கற்பனைக் கருத்துக்கு ஆதாரவாகப் பொருந்தாத உவமையைக் காட்டுகிறார்கள் வைதீகர்கள் என்றுதானே கொள்ளவேண்டி வருகிறது!

பெற்றெடுத்தவளைத் தாய் என்றும், மணந்துகொண்டவளை மனைவி என்றும், உலகியலில், மனிதன் வகுத்துக்கொண்டுள்ள ஒழுக்கநெறியின்படி, கருதுகிறோம். தாயை ஒருவித உறவுமுறையில் மதிப்பிடுகிறோம்; மனைவியை வேறோர்வித உறவு முறையில் மதிப்பிடுகிறோம்; ஆனால் இருவரும் ஒரேவிதப் பெண்தன்மை பூண்டவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒருவனுக்கு அவனுடைய மனைவி எப்படி உறவுடையவள் ஆகிறாளோ, அப்படித்தான் அவனுடைய தாய் அவனுடைய தந்தைக்கு என்பதையும், ஒருவனுக்கு அவனுடைய தாய் எப்படி உறவுடையவள் ஆகிறாளோ, அப்படித்தான் அவனுடைய மனைவி அவனுடைய பிள்ளைக்கு என்பதையும் மறந்துவிடலாகாது. தாயையும் மனைவியையும் எப்படி வேறுபிரித்து மதிப்பிடுகிறோமோ, அப்படியேதான், கற்சிலையையும், கற்படியையும் மதிப்பிடுவதில் வேறுபடுத்தி மதிப்பிடுகிறோம், கற்படிக்கட்டு, காலால் மிதித்து மேலேறுவதற்கும் கீழே இறங்குவதற்கும் பயன்படுவதாகும் என்று மதிப்பிடுகிறோம்; கடவுட்சிலையைக் கண்டு வியத்தற்குரியக் கண்காட்சிப் பொருளாகப் பயன்படுவதாகும் என்று கருதுகிறோம்; ஆனால் இரண்டும் ஒரேவிதக் கற்கள் தாம் என்பதை மறந்துவிடலாகாது. தாயும் மனைவியும் எப்படி ஒரேவிதப் பெண்தன்மை கொண்டவர்களோ, அப்படியேதான் கற்கடவுட்சிலையும் கற்படிக்கட்டும் ஒரேவிதக் கல்லுக்குரிய தன்மை உடையவைகளாகும். இந்த அடிப்படையில் நின்று பார்த்தால், ‘தாயும் மனைவியும் ஒரேதன்மையினர்தாமா?’ என்று வைதீகர்கள் கேட்பதன்மூலம், ‘கடவுட் சிலை’யைக் ‘கற்சிலை’ என்று கூறும் கூற்றை அவர்கள் மறுத்துவிட்டவர்கள் ஆகமாட்டார்கள் என்பதை எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

கருங்கற் சிலை—கருங்கற் படி ஆகிய இவை இரண்டும், ‘**கருங்கற் தன்மை**’யில் வேறுபாடு கொண்டிருக்கவில்லை என்று பகுத்தறிவுவாதிகள் கூறும்போது **தாய்—மனைவி** ஆகிய இருவரோடும் நாம் கொண்டிருக்கும் உறவு முறையை வைதீகர்கள் கொண்டுவந்து முன்நிறுத்துகின்றனர். இது எங்ஙனம் பொருந்தும்? எந்த வகையிலும் பொருந்திவராத கூற்றாயிற்றே! இரண்டு பொருள்களின் (கற்சிலை-கற்படி) தன்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது, வேறு இரண்டு பொருள்களின் (தாய்-மனைவி) தன்மையை அல்லவா உவமை எடுத்துக்காட்டாகக்கூறவேண்டும்? ஆனால், வைதீகர்கள், ஒருவன் அவனது தாயோடும், மனைவியோடும் கொள்ளக்கூடிய உறவுமுறையை அல்லவா

டுத்துக்காட்டுகிருர்கள்? இது எவ்வாறு பொருந்தக்கூடிய எடுத்துக்காட்டாகும்? என வதான் வைதீகர்களின் இந்த எடுத்துக் காட்டு எள்ளி நகையாடத் தக்கப் பொருத்த ற்ற கூற்று என்று பகுத்தறிவுவாதிகள் செப்புகின்றனர்.

ஒருவனைப் பெற்றெடுத்த உரிமை தாய்க்குத் தான் உண்டே ஒழிய, அந்தப் பெற்றெடுத்த உரிமை மனைவிக்கு உண்டு என்றோ, அல்லது மனைவியிடம் அந்த உரிமையை மாற்றியமைக்க முடியும் என்றோ எண்ணுவது இயற்கைக்குப் பொருந்திவராது என்பதுமட்டுமல்ல, முட்டாள்தனமாகவல்லவோ கருதப்படும். அது போலவே தாயை மனைவியாக்கிக்கொள்ள எண்ணுவது ஒழுக்கமேம்பாட்டில் வளர்ந்த நாகரிக நல்லுணர்ச்சிக்குப் பொருந்திவராது என்பது மட்டுமல்லாமல், அருவருப்புணர்ச்சியையுந் தருவதாகும்.

மனைவியைப், பெற்றெடுத்த தாயாக மாற்ற முடியாது; தாயைக், கட்டிக்கொண்ட மனைவியாகக் கருதக்கூடாது. ஆனால் கருங்கற்படியைச், சிலையாகச் செதுக்கி நிறுத்தலாமே! அதுபோலவே, கற்சிலையை, இரண்டு மூன்றாக உடைத்துப் படிக்கட்டாகப் போடலாமே! கடவுட் சிலையைக் கற்படியாகவும், கற்படியைக் கடவுட் சிலையாகவும் மாற்றமுடியும்; ஆனால் தாயை மனைவியாகவும் மனைவியைத் தாயாகவும் மாற்றமுடியாது—கூடாது! மாறும் நிலைமைகொண்ட இரண்டிற்கு, மாறாத நிலைமைகொண்ட இரண்டை உவமையாக்குவது பொருந்தாது—பொருளற்றது—உண்மைக்குப் புறம்பானது — அறிவுடைமையாகாது என்பதை வைதீகர்கள் உணர்தல் வேண்டும்.

ஆற்றலற்றதாகக் கிடக்கும் கருங்கல், கடவுட்சிலையாக வடித்தெடுக்கப்படும்போது, ஆற்றலுள்ளதாக 'மாறிவிடுகிறது' என்று கற்பனை செய்துகொண்டு, அந்தக் கருத்துக்கு ஆதரவாக, மனைவி—தாய் ஆகியவரோடு நாம் கொள்ளும் உறவுமுறையை எடுத்துக் காட்டாகக் கூறுவது, குறையறிவுடைய கூற்றாகும் என்க.

❖ ❖ ❖

மும்முனைப் போராட்டக் காலத்தில், தி. மு. க. பொதுச்செயலாளர், கழகப் பொறுப்புகளைக், கழக உறுப்பினர் அல்லாத தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் ஒப்படைத்தது, கழக உறுப்பினர்களைப் பாராமுகம் செய்வதாக ஆவதோடு, மக்களாட்சிப் பண்பிற்கு மாறுபட்ட செயலும் ஆகாதா?

இப்படிக் கேள்வி கேட்போர், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டவை கழகப் பொறுப்புகள் அல்ல, தலைமை நிலைய நிருவாகப் பொறுப்புகள்தாம் என்பதை முதற்கண் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

மும்முனைப் போராட்டங்களைப் பற்றிய தீர்மானங்களை மாவட்ட மாநாடுகளில் நிறைவேற்றியான பிறகு, அவற்றை எவ்வாறு நடைமுறையில் நடத்துவது என்பதுபற்றிய திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிற்கூடி ஆராய்ந்துகொண்டிருந்த போது, அறிஞர் அண்ணா அவர்களும் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோரும்சிறைபிடிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்த நாட்களில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். அப்பொழுது முதலமைச்சராக இருந்த தோழர் சி. இராசகோபாலாச்சாரியாரும், நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியமும் "கழகத்தின் கணக்கைத் தீர்த்துக்கட்டப்போகிறோம்", "கழகத்தை ஒழித்துக்கட்டப்போகிறோம்", "இனிக் கழகம் வரலாற்றில் இடம்பெறுமேயொழிய நாட்டில் இடம்பெறாது" என்னும் கருத்துப்படப் பேசிவந்தனர். கழகத்தைக் கட்டிக்காக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்று, ஆனால் செயல் ஏதும் செய்யமுடியாத நிலையில் சிறையிலடைக்கப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள், கழக உறுப்பினர்கள் அத்துணைப் பேரையும் சென்னை அரசாங்கம் சிறைப்பிடித்துவிடுமோ என்று எண்ணினார்கள். தோழர் ஆச்சாரியாரின் பேச்சும், போக்கும் அந்த எண்ணத்தை நாளுக்குநாள் வலுவடையச் செய்வனவாக இருந்தன. முக்கியமான பொறுப்புகளைத்தாங்கி இருந்த கழகத் தோழர்களும், பிற கழக உறுப்பினர்களும் சிறைப்பிடிக்கும்படியான நிலைமை ஒருகால் ஏற்பட்டுவிட்டாலும், கழகச் செய்தித்தாளை நடத்திச்செல்லவும், தலைமைநிலைய நடைமுறை வேலைகளை நடத்திச் செல்லவும், நிதி திரட்டல்—கூட்டங் கூட்டுதல்—வழக்கு நடத்துதல் போன்ற செயல்களைப் புரியவும் ஒருவர் இருக்கவேண்டுமே என்று ஆழ்ந்து சிந்தனை செய்தார்கள். அப்படியிருக்கும் ஒருவர் கழக உறுப்பினர் பட்டியலிலே பெயர் பொறிக்கப்

படாமலிருப்பவராக இருந்தாலல்லவா, அரசாங்கத்தால் அவர் சிறைப்பிடிக்கப்படாமலிருப்பார் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணினார்கள். தலைமை நிலைய நிருவாகப் பொறுப்புகளை ஏற்று நடத்தக் கழக உறுப்பினர் அல்லாத ஒருவரும், ஆனால் கழகக் கொள்கையிலும் வளர்ச்சியிலும் நீங்காப் பற்றுடையவரும், செயலாற்றும் திறமை படைத்தவரும், நாடெங்கும் சுற்றித்திரியும் தன்மைகொண்டவரும், பேசும் ஆற்றல் படைத்தவரும், அரசாங்கத்தோடு நேரிடையாகப் போராடும் வாய்ப்புப் பெற்றவரும், கழகத்தோழர்கள் அனைவரின் அன்பையும் ஆதரவையும் பெற்றவரும் ஆன ஒருவர் வேண்டுமே என்று அறிஞர் அண்ணா அவர்கள் கவலைப்பட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் நீடு சிந்தித்தபோது, மேற்குறித்த தன்மைகளுக்கெல்லாம் நிலைக்களனாய்த் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் விளங்குவதைக் கண்டார்கள். தலைமை நிலையப் பொறுப்புகளைத் தாம் இல்லாத காலத்தில் செவ்வனே நிறைவேற்றிவரும் முறையில், அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களைப் பொறுப்பாளராக நியமிக்க ஒருப்பட்டார்கள். அப்படி நியமிப்பது, பொதுச்செயலாளர் அவர்களுக்குப் பொதுக்குழு சட்டதிட்டப்படிக் கொடுத்துள்ள உரிமைகளில் ஒன்றுக்கு உடன்பட்டதேயாகும்,

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் ஏ. கோவிந்தசாமியிடம் தலைமைநிலைய நிருவாகப் பொறுப்புகளை ஒப்படைத்தார்களே ஒழிய, பொதுச் செயலாளர் பொறுப்பையோ, கொள்கை வகுக்கும் பொறுப்பையோ, திட்டம் தீட்டும் பொறுப்பையோ ஒப்படைக்கவில்லை. அறிஞர் அண்ணாவின் மேற்குறித்த செயல் மக்களாட்சிப் பண்பிற்கு உடன்பட்ட ஒன்றே ஒழிய, மாறுபட்ட செயலல்ல.

கழக உறுப்பினர்கள் அத்தனைப்பேரும் சிறைப்பிடிக்கப்பட்டுவிடுவார்களோ என்ற எண்ணம் ஏற்பட்டதால்தான், கழக உறுப்பினர் அல்லாத ஒருவரைத் தேடவேண்டிய இன்றியமையாமை அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஏற்பட்டது.

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் போராட்டக் காலங்களில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைத், திருச்சியில் கூடிய தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம் முழுமனதோடு ஏற்றுக்கொண்டதோடு, தலைமை நிலையப் பொறுப்புகளைப் பொதுச்செயலாளர் அவர்கள் இல்லாத காலத்தி[ல்] ஏற்று நடத்தியமைக்காகத், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களைப் பொதுக்குழு ஒ[ரு]மனதாகப் பாராட்டவும் செய்தது. இவற்[றி]லிருந்து, தோழர் ஏ. கோவிந்தசாமி அவ[ர்]களைத் தலைமை நிலையப் பொறுப்பாளராக நி[ய]மித்தது, மக்களாட்சிப் பண்பிற்கு ஏற்றதாகு[ம்] என்பதோடு, கழக உறுப்பினர்களால் வரவே[ற்]கப்பட்டதுமாகும் என்பதை உணர்க!

அட்டைப்படம்

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம், பொங்கல் திருநாளை, 14-1-55 ஆம் நாள், மிகச் சீரும் சிறப்பும் பொருந்த கொண்டாடியபோது, போட்டிகளில் வெற்றிபெற்றோர்க்குப் பரிசு அளிக்கும் பணியினைப், பொதுச்செயலாளர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். "குடும்பத்தில் ஓர்நாள்" என்ற ஓரங்க நாடகத்தை, மிகச் சிறப்பாக நடித்துப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர்குழுவிற்கு, அறிஞர் அண்ணா அவர்கள், வெள்ளிக் கோப்பை ஒன்றைப் பரிசாக அளிக்கும் காட்சியே, இவ்விதழின் அட்டைப் படமாக விளங்குகிறது. நிழற்படம் எடுத்து உதவியவர்கள், 33-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாவார்கள். அவர்களுக்கு "மன்றத்"தின் நன்றி உரித்தாகுக!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

தயற்கலை

கே. பி. சுந்தரம், G. C. T.

மேல்சட்டைக்கு அளவு எடுக்கும் முறை

மேல் சட்டைக்கு நீள அளவு, சுற்று அளவு என இரு ப்படும். முதலில் நீள அளவும், பிறகு சுற்று அளவும் எடுப் மிகச் சிறந்த முறை எனக்கொள்ளலாம்.

இடுப்புவரை முதுகு நீள அளவு

1-வது படத்தில் 1ல் இருந்து, இடுப்புபள்ளம் 2வரை படத் காட்டிஉள்ளபடி எடுக்கவேண்டும்.

முழுநீள அளவு

1-வது படத்தில் 1-ல் இருந்து 3-வரை அல்லது அணிபவ விருப்பப்படி கூட்டியோ, குறைத்தோ படத்தில் காட்டி ளபடி எடுக்கவேண்டும்.

பாதித் தோள் அளவு

1-வது படத்தில் A-ல் இருந்து 4 வரை படத்தில் காட்டி ளபடி எடுக்கவேண்டும்.

கை நீள அளவு

1-வது படத்தில் A-ல் இருந்து 4வரை பாதித் தோள் அள தொடர்ந்து B-வரை அரைக் கை அளவும், தொடர்ந்து 5 ர முழுநீளக் கை அளவும் படத்தில் காட்டியுள்ளபடி தேவை ன அளவை எடுத்துக்கொள்ளவும்,

மார்புச் சுற்று அளவு

2-வது படத்தில் 6-வது எண் உள்ள இடத்தில் மார்பைச் றி படத்தில் விளக்கியுள்ளபடி மார்பு சுற்று அளவு எடுக்க ண்டும். மார்புச் சுற்று அளவு மார்பையும் முதுகையும் சுற்றி ப்பதாகும். இஞ்ச்டேப்பை இறுக்கியோ அல்லது தளர்த் யா பிடிக்கக்கூடாது. இஞ்ச் டேப்பை அக்குளுக்குச் சிறிது ப்படுத்தி மார்புகளுக்குச் சற்று மேலே எடுக்கவேண்டும். துகுப்புறத்தில் டேப் கீழே நழுவிவிடாமல் பார்த்துக்கொள்ள ண்டும்.

இடுப்புச் சுற்று அளவு

2-வது படத்தில் 7-வது எண் உள்ள இடத்தில் இடுப்பைச் றி படத்தில் விளக்கி உள்ளபடி இடுப்புச் சுற்று அளவு க்க வேண்டும்.

கழுத்துச் சுற்று அளவு

2-வது படத்தில் 9-வது எண் உள்ள இடத்தில் கழுத்தைச் றி படத்தில் உள்ளபடி கழுத்துச் சுற்று அளவு எடுக்கவும்.

முன்னங்கை (கப்) சுற்று அளவு

2-வது படத்தில் 8-வது எண் உள்ள இடத்தில் முன்னங் கையைச் சுற்றி படத்தில் விளக்கியுள்ளபடி முன்னங்கை லூஸ், இவைகளுக்கு தேவையான அளவுகளை, அணிபவரின் விருப் படி கூட்டியோ குறைத்தோ எடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு: 2-வது படத்தில் 1-ல் இருந்து 10 வரை முழுநீள ளவை எடுத்துக்கொள்ளலாம். முன்பக்கத்தில் இருந்து முழு அளவு மேல் சட்டைக்கு எடுப்பது வழக்கம்.



1-வது படம்



2-வது படம்

வருந்துகிறோம்

'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன் அவர்களின் தையார் **திரு சாத்தப்பா** அவர்கள், கடந்த 4-ந்தேதியன்று, கூடல்பட்டியிலுள்ள தமது இல்லத்தில் காலமானசெய்தி ட்டு மிகவும் **வருந்துகிறோம்.**

Regd. No. M 6296

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :-வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாஜி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி. மன்றம் பதிப்பகம்,

26. நைனியப்பன் தெரு.

மண்ணடி :: சென்னை-1.

நம் நாடு

[தி மு க வின் ஒரே நாள் இதழ்]

ஆசிரியர் : அறிஞர் அண்ணாதுரை

தி. மு. க. கிளைகளும், தி. மு. க. தோழர்களும் "நம்நாடு" வாங்குவதைத் தமது கடமைகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதுவார்களாக !

"நம் நாடு" வளர்ச்சியே கழக வளர்ச்சி என்பதைக் கழகத் தோழர்கள் உணர்வார்களாக !

இன்றே "நம் நாடு" விற்குச் சந்தாதாரராகச் சேருங்கள் !

ஆண்டுக் கட்டணம்	ரூ.	24—0—0
ஆறு திங்கள் ,,	ரூ.	12—0—0
தனி இதழ்	ரூ.	0—1—0

நிர்வாகி, "நம் நாடு",

'அறிவகம்'

இராயபுரம் :: சென்னை-13.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A. at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS